உங்கள் எதிர்காலம்

பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

டாக்டர்கள் சிபார்சு செய்கிறார்கள்

நற்சாக்ஷி

★

பரீக்ஷைக்கும், பலனுக்கும், உத்திரவாதமானது.

குஷ்ட நிவாரணி

45 வருஷ அனுபவமானது.

எவ்வித மருந்திலும் தீராத 18 வகைகுஷ்டமும், செம்மேகப்பற்று கருமேகம், தடிப்பு, அரிப்பு, மதமதப்பு விஷக்கடி, குழிப்புண்கள் எல்லாம் 6 வேளை மருந்தில் தீருகிறது.
50 வேளை ரூ 10.

வைத்தியபதி R.M. நாராயணசாமி
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி.

50 வேளைக்கு குறைந்து அனுப்புவதில்லை.

கனம் தங்கிய வைத்யர் அய்யா அவர்களுக்கு,

எனது சகலை கோயமுத்தூரிலிருந்து வந்து தங்களிடம் மருந்து சாப்பிட்டார். 10 வருஷமாக எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும் ஊசிகள் போட்டும் தீராமலிருந்த குழி புண்கள் தினம் 20 தடவை நீர்போகுதல் கால்வீக்கம் யாவும் 3 வேளையில் ஆச்சர்யப்படும்படியான முறையில் சுகமாகிவிட்டது. நடக்க முடியாமலும் மதமதப்பாகவும் இருந்த கால்களில் சுவரணை ஏற்பட்டு நடக்க முடிகிறது. முதுகு பூராவும் லேசாக எரிகிறதாகச் சொன்னார். இம்மருந்தின் பெருமையை வாயால் புகழுவதற்கில்லை. இதற்கு நிகரான மருந்தே இல்லையென உறுதியாய்க் கூறுகிறேன்

(ஒப்பம்) ஜி கிருஷ்ணராவ்,
ஹெட் போஸ்டுமென், பழனி.

கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
பட்டு & நூல்
ஜவுளி ரகங்கள் சாசமாய்
கிடைக்கும் இடம்

ராம விலாஸ்

S.N. ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ் ...

ஸித்தமகர்த்வஜ...
(தங்கம் சேர்ந்தது. ...
அங்கங்களையும் ந...
களையும் பலப்படுத்து...
திடசாலியாயும் யௌவ...
மாயும் இருக்கலாம். ...
மாத்திரை சீசா 1-க்கு ...

மஹாபில்வாதி லேகி...
பித்தம் அஜீரணம், மலபா...
வயிற்று கோளாறுகளை உடனே...
விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்
வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இ...
களை விலக்கி உத்தியோக வியாபார லா...
கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைக...
அளிப்பதில் அபாரமான சக்தி உள்ள...
இதில் வசிகரண மூலிகை பிரதி ஸரஸ்வத்ர...
ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்...
பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது...
கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரு...
வராமல் இருக்கும்படி ஒரே வேளை...
போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெ...
றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்த...
எங்கும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்



எல்லாவிதமான எலக்டிரி... சாமான்கள் கண்டிரோல்விலைக்... மொத்தமாகவும், சில்லரையாகவு... கிடைக்கும்.

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,
28, துளசிங்கப் பெருமாள் ...
சே...
திருவல்லிக்கே...

Pri... d and Publis... by S. Chakrapani Iyengar, at the SWADESA...

...தூசிக் கிருமிகள் தொண்டை நோய்களுக்கும், சுவாசப்பை நோய் ...க்கும் காரணமாகின்றன. பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகள் ...ல் கரைந்தவுடன் அபூர்வ மருந்துச் சரக்குகள் வெளிப்பட்டு ...ண்டைகளைச் சமனமூட்டி கிருமிகளைக் கொல்லும். இருமலை ...த்தி ஜவ்வு ரணங்களைச்குணமாக்கி வீக்கத்தை ஒழித்து அடைப்பை ..., சுவாசக்குழாய்களையும், சுவாசப்பையையும் கிருமிகளினின்றும் ...ாற்றுகின்றது. பெப்ஸ் இருமல், குளிர்ச்சி, சளிப்பு, இன்ப்ளு ... பிராங்கைடிஸ் மற்றும் இதர மார்நோய்களைக் குணப்படுத்து ... உலகப் பிரசித்திபெற்றது.

...ஜெண்டுகள்: மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

சாப்பிடவும்

PEPS

கிருமிநாச

சுவாச மாத்திரைகள்

எப்போதும் சப்ளை வைத்திருங்கள்

...லா மருந்து வியாபாரிகளிடமும் இடைக்கும்

ஆனந்த குஸுமாகர லேகியம்

...ர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் ...ர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

...ந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர் ...ாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை ...த்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர் ...பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், ... போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் ...கமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் ...து. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் ரூ. 2—8—0

...பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 12 முன் பணம் அனுப்பி ...றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

...லயாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

...கில் புதுதெரு- P. B. No 27, மதுரை.

... - 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் ...கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் ...9 SEA ST., COLOMBO.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

பரிசு! பரிசு!!

R. KRISHNA SCENTED NUT POWDER REGD. No. 3361 ஸ்ரீ கிருஷ்ணா பரிமள பாக்குத்தூள்

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உரை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு.
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார துடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில் களும், வாஸலைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின் களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்ப தற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரிய... அசோகா அண்டு கோ.,
4... டங்கு தெரு, மதராஸ் 1.

புண்ணுகி வலிக்கும் காலா?

உலக புகழ் பெற்ற இந்த ஜாம்பெக் உபயோகியுங்கள்

இவ்வற்புதமூலிகை மருந்தாகிய ஜாம்பெக், களைப்பு, வலி, புண், வீக்கம் இவற்றிற்கு நிவாரணமளித்து புண்ணுகிய காலை குணமாக்கி உமது கால் ஆரோக்கியமாக விருக்கச் செய்யும். கெட்டி சருமத்தையும் ஆணிகளையும் ஜாம்பெக் மிருதுவாக்கி சுலபமாக அகற்றப்பட உதவும். மிருகக் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

சரும நோய்கள் காயங்கள் பூச்சி கடிகள். புண்ணுகி வலிக்கும் காயங்கள் தசை வலி, தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

Zam-Buk

சமனமூட்டி குணமாக்கும் கிருமிநாச மருந்து.

ஏஜண்டுகள்: மெஸார்ஸ் தாதா & கம்பெனி

பி. டி மதராஸ்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில தேவையுள்ளோர் தபால் செலவு அணா 12 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி. கும்பகோணம் ...விந்தப்பநாயக்கன் தெரு. சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் ...ங்களூர் 179 SEA ST., COLOMBO.

A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாக்ஷி மைக்ருஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர் பாக்கு, பால்கோவா, பிஸ்கட், கேக், உப்பிட்டு சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும், பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல்தரமான ஜவ்வரிசி ஈரோடு, சேலம் மஞ்சள் ரகங்கள், நெ. 1. மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும், பீடிக்கும் வேண்டிய உயர்தரமான புகையிலை ரகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடைபோடக்கூடிய பைபீல்ட் வேயின் மெஷின் தராசும் சப்ளை செய்கிறோம். கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

ஜவ்வரிசி தயாரிக்கும் முறை அடங்கிய புத்தகம் வேண்டுவோர் ரூ. 1. அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கும் சாம்பிளுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமணியம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ், அண்டு மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள் ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

0, 6

ஸ்டார் ஆப் இந்தியா

இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிட், டெல்லி.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
ஏஜண்டுகளும் ஆர்கனைசர்களும் தேவை.
தாராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

கிளை காரியதரிசி,

1/24, தம்புசெட்டி தெரு :: சென்னை.

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க்கணக்கானபேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்திபெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு காதில் இரைச்சல் மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம், ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதி பெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,

6, Panchpota, BENGAL.

எமது "சக்தி" மார்க் சேமியா

ருசி மிகுந்தது
சிற்றுண்டிகள்
தயாரிப்பதற்கு
மிகச்சிறந்தது.

★

சுத்தத்திற்கு
உத்தரவாத
மானது.

★

மொத்தமாகவும்
சில்லரையாகவும்
கிடைக்கும்.

★

வெளியூர் ஆர்டர்
களை உடனடி
யாகக் கவனிக்
கப்படும்.

★

சக்தி மார்க்
கற்பூரம்,
பெருங்காயம்
போற்றத்
தகுந்தவை.

தயாரிப்பவர்கள்:— ஏஷியாடிக் இண்டஸ்ட்ரீஸ்,
516, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்—5.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை,
தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

ஸ்ரீ கௌமார நாடி ஜோதிஷாலயம்

நெ. 2, ஹைரோட், ராயப்பேட்டை, சென்னை 14.

புராதன ஓலைச்சுவடிகளிலிருந்து இறந்தகால நிகழ்கால, எதிர்கால பலன்களை விவரமாக எழுதிக்கொடுக்கப்படுகிறது. ஜமீந்தார்களும், வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும் ஆச்சரியகரமான பலன்களின் உண்மையைக் கண்டு வியப்படைவதால் அனேக நூற்றுண்டுகளாக உலகபிரசித்திபெற்று விளங்கிவருகிறது. விவரம் விரும்புவோர் நேரில் அறியலாம்.

பண்டிட் செ. தங்கவேல் நாடார்.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள்
காலணாவுக்கு இரண்டு.

சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.

தயாரிப்பவர்:

மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

சக்தி ஆரூடம்!

புகழ்பெற்ற "சக்தி பால ஜோதிடரால்" வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். அண்ணாமலை யூனிவர்சிட்டி வித்யா ரத்ன **Prof. R.** ராமானுஜாச்சாரி **M.A.**, கூறுவது:–'தங்கள் சாஸ்திர ஆராய்ச்சியையும் எதிர்கால பலன்கள் கூறும் திறமையையும் நான் மிகவும் மெச்சுகிறேன். பலன்களில் எனக்கு மிகவும் திருப்தி' 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் எழுத ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்திகவசம் ரூ. 7-8-0. வி. பி. பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும். **N. B.** வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.

லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

வைரங்கள், நகைகள்

பருமனைக்கொண்டு மட்டும் வைரத்தின் மதிப்பை அளவிட முடியாது. வர்ணம், பட்டை பிரகாசம், இவற்றையும் கொண்டே மதிப்பிட வேண்டும் ஆகையால் வைரமோ, வைரம் பதித்த நகைகளோ வாங்கும்போது. நம்பிக்கையும் அனுபவமும் வாய்ந்த நகைவியாபாரியின் உதவியை நாடவேண்டும்.

உம்மிடி

ராமையா செட்டி குருஸாமிசெட்டி & கோ.

23-25, சைனா பஜார் ரோடு, சென்னை.

அறிவிப்பு

கீழ்க்கண்டுள்ள ஊர்களுக்கு 1—5—48 முதல் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எமது ஏஜண்டிடம் தினசரி, வாரப்பதிப்புக்குரிய சந்தாத் தொகைகளை செலுத்தி சந்தாதாரர்களாகப் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

பெங்களூர் ஸிடி - கண்டோன்மெண்ட்

ஸ்ரீ கே. எஸ். எஸ். ராஜன்,
1-வது கிராஸ் ரோடு, சங்கரபுரம்
பசவங்குடி போஸ்டு,
பெங்களூர் ஸிடி.

ஸர்குலேஷன் மானேஜர்.
சுதேசமித்திரன், சென்னை.

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உரை அனுப்பினல் 50—0-0-3 பொட்டலம் இனும்,

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு.
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானல் ரியல் அசோகா அண்டு கோ.வில் வியாபார துடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸலைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும் அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N B. ஒரு கேஸ் பாககுதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

இவ்வுலகவாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். மெஸ்மெரிஸம், ஹிப்னுடிஸம் மானிட வசியம் முதலிய சாஸ்திரங்களின் இரகசியத்தை அனுபவ சாத்தியமாக விளக்கிக்கூறும் அருமையான இரகசிய நூல். இந்நூலைப்படித்த பின் இதன் அருமையை நீங்கள் நன்குணர்வீர்கள். கண் கவரும் வனப்பு வாய்ந்த சிறந்த நூல். இதன் முன் பதிப்புக்களில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் செலவாயிருப்பதே இதன் மேன்மையைக் குறிக்கும். இன்றே உங்கள் பிரதிக்கெழுதுங்கள்.

விலை ரூ. 4—8—0

தபாற் செலவு அணு 10.

எஸ். ஜே. புக் டெப்போ
30, சாந்தோம் : சென்னை 4.

கொழும்பில் கெய்஁லர் வீதி. 166 K. மதார் சாஹிப் இடமும் கிடைக்கும்.

S.A.H. TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R*



ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நீதி, தியாகராய நகர், மதராஸ் 17.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை. தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனை தான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

அம்பால்ஜன் பெயின்பாம்

★

இது தலைவலி, பல்வலி, இடுப்பு வலி முதலான எல்லாவிதமான நோய்களையும் விரைவில் குணப்படுத்தகூடின ஒரு கைகண்ட ஸித்த ஔஷதம்.

பெரிய புட்டி 1-க்கு	1 0 0
சின்ன புட்டி 1-க்கு	0 10 0

ஏஜண்டுகள் தேவை

ஸோல் ஏஜண்டு:

வர்மாஸ்

ஆயுர்வேத பார்மஸி

ஆலப்புழை

(திருவிதாங்கூர் ஸமஸ்தானம்)

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்[...]ட்ரீஸ்... திருப்பூர். S.I.

ஸாயி கவசம்

(உத்தரவாதம் பெற்றது)

பரீக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம் இவைகளில் வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம் ஞானம் இவை விருத்திக்கும், ஆரோக்யம், சுகம், சம்பத்து கைகூடுவதற்கும் இன்றியமையாதது. பூஜை செய்தனுப்புவதால் ஜன்ம நக்ஷத்திரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. பலனில்லையேல் பணம் வாபீசு செய்யப்படும். விலை ரூ. 3-8. ஸ்பெஷல் ரூ. 10. தபால் செலவு உள்பட. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

ஸாயி ஜோதிடர் ஸாயி ஆஸ்டிரல் ஸ்டுடியோஸ், உறையூர் - திருச்சி

அட்டைப்படம்

அமெரிக்கா சென்ற இவ்விரு இந்தியக் குழந்தைகளும், படக்காட்சிகளைப்பார்த்து களிப்பதில் பேரவாக் கொண்டனவா. 8-மாதமுள்ள சிறு குழந்தைக்குப் பெரிய குழந்தை படங்களைக் காட்டி ஆனந்தப் படுத்துகிறது.

தந்தி விலாசம்: "சுகந்தம்."

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த
"3001" ஜவ்வாது பத்திகள்
இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த
"301" ஜவ்வாது பத்திகள்
நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த
"31" ஜவ்வாது பத்திகள்
ஆரோக்கிய வாழ்விற்கு
"ஆசாத்" பாக்கட் பத்திகள் &
"ஆசாத் ஹிந்த்" குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,
நெ. 39 லெக்ஷிமிபுரம் 6-வது தெரு, மதுரை.
பிராஞ்சு: நெ. 4 அப்பாஜிராவ் தெரு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936)

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப்பிரசாதமான மருந்து தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி R. M. நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ வைகாசி௴ 10௳ ★ 1948-௵ மே௴ 23௳ No. 17

பாலஸ்தீன அமளி

பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் மாண்டேட் ஆட்சி ரத்தானதையோடு, அந்நாடு அமளிதுமளிபடுகிறது. யூதரும், அராபியரும் இங்கு மும்மரமாக ஒருவரையொருவர் கொன்று தள்ளுகின்றனர். சமாதானத்தைப் பாதுகாக்கவிருக்கும் ஐக்கிய நாடுகள் சங்கத்தில் இன்னும் பாலஸ்தீனப் பிரச்னைபற்றி ஓயாமல் விவாதம்! பாலஸ்தீனம் முழுதும் பற்றியெரிகையில், அங்குள்ள இரு ஜாதிகளிடையே மூண்டுள்ள பயங்கரமான போர் அந்நாட்டுடன் நில்லாதென்று தெரிந்தும் சாவதானமான ஆராய்ச்சி நடக்கிறது. ஒரு வருஷகாலமாக ஐக்கிய நாடுகள் சங்கத்தில் இத்தகைய விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இதில் துரிதமாக ஒரு நேரான முடிவுக்கு வரவில்லையாயின் நிலைமை எவ்வளவு கோரமாகும் என்பது நன்கு தெரிந்த விஷயம். எனினும் அத்தகைய முடிவெதுவும் இதுவரை ஏற்படாததிலிருந்து பிரச்னை தீர்வதில் அச்சங்கத்துக்கு ஒன்று மனமில்லை; அல்லது அத்தகைய முடிவு எதையும் நிறைவேற்றச் சக்தியில்லை என்றே தோன்றும். ஆனால் சக்தியில்லை என்று சொல்ல இடங்கிடையாது. அதிலுள்ள வல்லரசுகள் ஒன்றுபட்டு மனம் வைத்தால் ஒரு நேர்மையான தீர்ப்பை பாலஸ்தீன மக்கள் ஏற்கச் செய்வது அசாத்தியமன்று. ஆனால் அவைகளுக்கு அதில் இஷ்டமில்லை. அதற்கு மாறாக, பாலஸ்தீனத்தில் அமளி பெருகக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்குவதிலேயே அவ்வல்லரசுகள் சிலவற்றின் அக்கரையெல்லாம் அதுவே தங்கள் சுயநலத்துக்கு உகந்ததென்பது அவற்றின் கருத்து.

புதிதாக முளைத்துள்ள யூத ராஜ்யத்தை அமெரிக்கா வெகு அவசரமாக அங்கீகரிக்க முன்வந்தது இதற்கு மற்றொரு ருசு. இதன் மூலம் அப்பிரதேசத்தில் சச்சரவை கூடிய வரை நிரந்தரமாக்க அந்நாடு நன்கு விதை விதைத்துவிட்டது. யூதருக்குச் சாதகமாக அமைந்த பாலஸ்தீனப் பிரிவினைத் திட்டத்தை உருவாக்கியது முக்கியமாக அமெரிக்காதான். பின்னர் அத்திட்டத்தைக் கைவிட்டதுபோல் அமெரிக்கர் பேசினராயினும், அது வெறும் நடிப்பே. யூதர் கட்சியில் அமெரிக்கருக்குள்ள மோகத்துக்கு முக்கிய காரணங்கள் இரண்டு. யூத ராஜ்யம் மத்தியக்கிழக்குப் பிராந்தியத்தில் தங்கள் கை வலுக்க உதவுமென்ற நம்பிக்கை ஒன்று; மற்றொன்று அமெரிக்காவில் யூதவாக்காளர் தொகை அதிகம் என்பது. அதுவும் இவ்வாண்டு இறுதியில் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்தல் நடக்கவிருப்பதால், ட்ரூமன் கோஷ்டி யூதர் கட்சியிடம் விசேஷமான பரிவு காட்டுகின்றது. எனவே தனி யூதர் ராஜயம் ஏற்படுவதற்கு வசதிகரமான ஒரு நிலைமையை சிருஷ்டித்து, இப்போது அந்த ராஜ்யம் உதயமானதும் சரேலென்று அதற்கு அமெரிக்க சர்க்கார் அங்கீகாரம் அளித்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அவ்வாறு அங்கிகாரம் அளித்ததற்கு அவர்கள் ரஷ்யா மீது பழிபோடுவதுதான் வேடிக்கை. இந்நிலையில் ரஷ்யாவும் அதே நாட்டுக்கு அங்கிகாரம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கர் முயற்சி காரணமாக, மதமொன்றையே அடிப்படையாகக்கொண்ட ஒரு தனிராஜ்யம் மத்தியகிழக்கில் முளைத்துவிட்டது. ரஷ்யாவும் தனது நலத்தைப் பொறுத்த அரசியல் காரணங்களை முன்னிட்டு அதற்கு இடங்கொடுத்துவிட்டது. இவ்வாறு ஒரு தனி யூத ராஜ்யம் தோன்ற

—அடுத்த பக்கம்.



சமீபத்தில் நடந்த காஷ்மீர் சுதந்திர தின விழாவில் பிரதம மந்திரி பண்டித நேரு கலந்துகொண்டார். அங்கு அவருக்கு பிரமாதமான வரவேற்பு நடந்தது. நேரு அணிவகுப்பைப் பார்வையிடுகிறார்.

விடுவதன் விளைவுகள் அவ்வல்லரசுகள் நன்கறிந்தவைதான். பாலஸ்தீனத்திலுள்ள அராபியர்மட்டுமின்றி அராபியநாடுகள் எல்லாம் தங்கள் ராணுவ பலத்தைக்கொண்டு அதைத் தீவிரமாக எதிர்க்கும் என்பது முன்பே தெரிந்த விஷயம். பிரிட்டிஷ் மாண்டேட் முடிந்தவுடனே எகிப்துத் துருப்புகள் பாலஸ்தீனத்துக்குள் புகுந்துவிட்டன. இன்னும் டிரான்ஸ்ஜார்டன், இராக், ஸிரியா, லெபனன் முதலிய நாடுகளிலிருந்தும் அராபியப் படைகள் அங்கு பிரவேசித்து யூதருடன் கடும்போர் நடத்த ஏற்பாடாகிவிட்டது. இதற்கிடையில் பாலஸ்தீனத்தைக் கவர்வதில் அராபிய நாடுகளுக்குள்ளேயே போட்டியேற்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வருகின்றன. இது புரட்டுப் பிரசாரமா என்று தெரியவில்லை. ஆனல் எப்படியும் யூத ராஜ்யத்தை சிதைப்பது எளிதாயிராது. ஏனெனில் அவர்களுக்குப் பல வழிகளிலும் ஆதரவளிக்க அமெரிக்கா முற்றிலும் தயாராயிருந்து வருகிறது.

அமெரிக்காவைத் தவிர, பல ஐரோப்பிய நாடுகளிலும் யூத ஜாதி சிதறிக்கிடக்கிறது. தங்களுக்கென்று இப்போது அவர்களுக்கு ஒரு சொந்த நாடு ஏற்பட்டுவிட்டதால், அதைப் பல வழிகளிலும் பலப்படுத்துவதில் அவர்கள் அக்கரை காட்டுவது இயற்கை. அவர்களில் பலர் அங்கு போய்க்குடியேற இனியொரு தடையுமில்லை. ஆனல் இதுவே அவர்களை பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஒதுக்குவதான ஒரு விபரீதத்துக்கும் காரணமாகக்கூடும். உண்மையில் யூதர் விஷயத்தில் ஹிட்லரின் நோக்கம் இதுதான். ஆனல் இதில் அவர் கையாண்ட முறை வேறு: தற்போதைய முறை அதுவல்லவாயினும், பலனைப் பொறுத்தமட்டில் ஒன்றே. ஆனல் தற்போதைய வல்லரசுகளுக்கு இதைப்பற்றி லட்சியமில்லை; மதத்தை அடிப்படையாகக்கொண்டு ஒரு தனி ராஜ்யம் சிருஷ்டிப்பதன் அக்கிரமத்தைப்பற்றியும் அவைகளுக்குச் சிந்தனையில்லை; இத்தகைய ஒரு ஏற்பாட்டால் ஜனநாயக முறைப்படி ஒரு தேசமக்களுக்குள்ள மூலாதார உரிமையை இந்தியரிடமிருந்து பறித்ததுபோல், அராபியரிடமிருந்தும் பறிப்பதுபற்றி அவ்வல்லரசுகளுக்குச் சிறிதும் கவலையில்லை. சுயநலமொன்றே அவைகளுக்குப் பிரதானம்.

———

இயற்கை எழில்

........ராம சுப்ரமண்யம்.......

1.

பூவில் இன்பத் தேனுண்டு!
புலவர் வாயில் கவியுண்டு!
நாவில் நல்ல சொல்லுண்டு!
நற்ற மிரையில் அழகுண்டு!

2.

பாடும் பாவில் இசையுண்டு!
பழத்தில் நல்ல சுவையுண்டு!
கூடும் அன்பில் குணமுண்டு!
குயிலின் குரலில் எழிலுண்டு

3.

ஓடும் நதியில் ஒலியுண்டு!
உலவும் மதியில் அழகுண்டு!
தேடும் பொருளில் நலமுண்டு!
தெய்வத் தமிழில் அருளுண்டு!

4.

ஆடும் கலையில் அழகுண்டு!
அன்பர் உள்ளத்தில் கனிவுண்டு!
காடும், மலையும் வளர்வதுபோல்
கருத்தை வளர்க்க அறிவுண்டு!

5.

வண்ணக் காவில் மலருண்டு!
வளரும் பயிரில் வளமுண்டு!
கண்ணுள் நல்ல மணியுண்டு!
காணும் கதிரில் ஒளியுண்டு!

6.

வானில வெள்ளி மீனுண்டு!
மழலைச் சொல்லில் நயமுண்டு!
கானில் மரங்கள் மிகவுண்டு!
கரும்பில் சுவையின் கனிவுண்டு!

7.

உறையும் நீரில் தெளிவுண்டு!
உடலில் நல்ல உயிருண்டு!
இரையும் கடலில் அலையுண்டு!
இவைகள் எல்லாம் இயற்கையடா!

ஸ்ரீநகரில் சமீபத்தில் நடந்த சுதந்திரக் கொண்டாட்டத்தின்போது, காஷ்மீர் தேசிய ராணுவச் சிறுவர்கள் அணிவகுப்பை பிரதம மந்திரி நேரு பார்வையிட்டு வணக்கம் செலுத்தினர். நேருவருகே நிற்கிறார் ஷேக் அப்துல்லா.

சென்ற 10-ந்தேதியன்று ஸ்ரீநகர் ஜீலம் நதியில் படகு வழியாக பண்டித நேரு, ஷேக் அப்துல்லா, அவர் அருகே நிற்கும் மௌலானா ஆஸாத் முதலியோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பகற்கனவு

மணியன்

"நாகரீகம் அடைய அடைய மனிதன் மிருகம் ஆகிறான் என்று சொன்னால் கோபம் வரத்தான் செய்கிறது. ஆனால் அன்றாட வாழ்க்கையில் மனிதன் நடந்துகொள்ளும், பழகும் விதத்தைப்பார்த்துக்கொண்டு வந்தாலே, இச்சொல்லில் உண்மை ஓரளவு இருக்கத்தான் இருக்கிறது என்று புலப்படும். மனிதன் ஆறறிவுள்ள மனிதனாக நடந்து கொள்ளவில்லை. மிருகங்களைக்கூட ஒரு வகையில் சேர்த்துக்கொள்ளலாம்; மனிதனோ விலங்கினும் கேடாய் விட்டான் என்பது 'உள்ளங்கை நெல்லிக் கனி' என விளங்கும். பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜீ (Creature) 'பிராணி' என்று அன்று குறிப்பிட்டது மனிதனையே தான்! வேறுயாரையும் அல்ல.

உடுக்க. உடையின்றி; உண்ண, உணவு இன்றி, மக்கள் பஞ்சத்திலடிபட்டு கஷ்டப்படும்போது, சரக்குகளைப்பதுக்கி, கள்ள மார்க்கெட்டில் அசலைப்போல பத்து பங்கு லாபம் வைத்து விற்கும் வியாபாரிகளை, விலங்கு என்பதா? என்னவென்பது?

'மதம்' மதம்' என்று மதத்தின் பெயரைச்சொல்லி லட்சக்கணக்கான ஜீவன்களை 'செத்தோம்' 'பிழைத்தோம்' என்று அலறிப்புடைத்துக்கொண்டு ஓடச்செய்து, நிற்க நிழலின்றி, நிர்க்கதியாகிய, அகதிகளாய் செய்த சுயநலப் பதர்களை மனிதர்கள்தான் என்று சொல்லத்தகுமோ? இதே ரீதியில் என்னவோவெல்லாம் லட்சியங்களை நினைத்துக்கொண்டு குருட்டுக் கனா கண்டு கொண்டிருந்தபோது ரகு பின் வருமாறு சொன்னான்:

"நான் அப்பொழுது ஏழாவது வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தேன். வயது பன்னிரண்டு. தங்கத்திற்கு வயது பதினெட்டு மாதம். சுவரைப் பிடித்து நடந்து கொண்டிருந்தாள். அழாமல் இருப்பதற்காக, கையில் கொடுத்திருந்த வாழைப்பழத்தை ருசி பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். மங்கள வாத்தியங்கள் முழங்கின. பல பெரியோர்கள் ஆசிர்வதித்தார்கள். என் அப்பா 'கட்டு' என்றார். நான் தங்கத்தின் கழுத்தில் திருமங்கலியத்தைக் கட்டி அவளை என் சகதர்மிணியாகக் கொண்டேன்.

கல்யாணம் என்பதில் எனக்கு அப்பொழுது சொல்லமுடியாத சந்தோஷம். உங்களைப்போல இந்தக் காலத்து மணமகனில்லை அப்போது நான். சரிகை வேஷ்டியும்; மோட்டார் ஊர்வலமும், கியாஸ் லைட்டுகளும்; எல்லாவற்றையும்விட எனக்கு உயிரான 'குஞ்சாலாடு'வும்தான் மனதைக் கொள்ளை கொண்டன. அந்த வயதில் விளையாட்டுப் பயல்தானே நான்? வருங் காலத்தைக் கண்டேனா? யார்தான் கண்டார்கள்?

இரண்டாயிரம் மூவாயிரம் வரதட்சிணை கொடுப்பதாகயிருந்தாலும், ஒரு வரன் கிடைப்பதற்கு வருடக்கணக்காக அலைய வேண்டியிருக்கிறது. இக்காலத்தில் தினசரிகளில் பத்துபதினைந்து தடவையாவது விளப்பரம் செய்ய வேண்டியிருக்கிறது. முன் காலத்திலோ பெண் கிடைப்பது மிக அருமை. கல்யாணம் ஆகாமல் பெண்கள் இருபது இருபத்திரண்டு வயது வரை இக்காலத்தில் வளர்வது போல. பிள்ளைகள், முப்பது, முப்பத்தைந்து வயதுவரையில் மணமாகாமலேயே இருப்பார்கள். வயதாகியும், விவாகமாகாமலிருந்தால் பிள்ளையைப்பெற்றவர்கள், "ஏன்? பிள்ளைக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை?" என்றும் "பிள்ளைக்கு ஏதாவது வியாதியோ?" என்றும் மறைபொருள்பட பெண்வீட்டார் யாராவது கேட்டுவிட்டால் என் செய்வது என்று மிகவும் கவலைப்படுவார்கள். இந்நாட்களில் போல "பெண் தேவை" என்று பேப்பர்களில் விளம்பரம் செய்யும் வழக்கம் இல்லையாதலால், பெண்ணைத் தேடவும் ஆரம்பித்துவிடுவார்கள். வெளி ஊர்களுக்குப்போயும் தேடுவதுண்டு. ஆகையால் பிள்ளைவீட்டாருக்கு இக்காலத்திலிருக்கும் முறுக்கும், விறைப்பும், அக்காலத்தில் பெண் வீட்டாருக்கிருந்தது. பெண்கிடைப்பது அவ்வளவு துர்லபமாயிருந்ததால், பெண்ணையும், பிள்ளையும் மாற்றியும் கொள்வார்கள். தங்கள் வீட்டிலிருக்கும் பிள்ளைக்கு, பெண்கொடுக்க சம்மதித்தால் தான், தங்கள் பெண்ணைக் கொடுக்க இசைவார்கள். இதனாலேயேவெளியாருக்கு இடம் கொடாமல், பந்துக்களுக்குள்ளேயே கொடுக்கல், வாங்கல் நடந்தது என்றாலும் பொருந்தும். இப்படிப் பெண்ணுக்குப் பெண் "பண்ட மாற்றல்" போல மாற்றிக்கொண்டதால் அநேகமாக முன் காலத்தில் வரதட்சிணையே கிடையாது என்று கூட சொல்லலாம். ஜாதகம், பொருத்தம், வயது, முதலியவற்றைப்பற்றிய சிந்தனையும் கிடையாது. சில சமயங்களில் ஜாதகமிருந்தாலும், இருதரப்பாரும், இல்லையென சாதித்து விடுவார்கள். பிறகு சுவாமியிடம் "பூ" கட்டிவைத்துப் பார்த்து விவாகத்தை நடத்துவார்கள். "கடலிலிருந்தாயினும் கன்னிகையைக் கொண்டு வா" "ஆயிரம் பொய்யைச்சொல்லி ஒரு தாலியைக் கட்டு" என்ற பழமொழிகள், அக்காலத்தில் பெண்கள் கிடைப்பது கடினம

யிருந்ததாலேற்பட்டனவோ என்று தோன்றவில்லையா?

"எனக்கு அந்தப் பிள்ளை பிடிக்கவில்லை; இந்தப் பிள்ளை வேண்டாம்" "தேர்தலுக்காக விளம்பரம்" என்றெல்லாம் வாழ்க்கைத் துணைவரை, துணைவியைத் தேர்ந்தெடுக்கிறார்களே, அதுபோல கிடையாது முன்பு. பெற்றோரும், பெரியவர்களும் பார்த்து நிச்சயம் செய்தால் பிள்ளையும், பெண்ணும் சம்மதித்தேயாகவேண்டும்.

பெண்கள் கிராக்கியாகையால், பள்ளைகளுக்கு, வயதாகி கல்யாணமாவது ஒரு புறமிருக்க, மிகவும் அறியாத வயதிலும் மணமாகிவிடுவதுமுண்டு. பள்ளியில் ஐந்தாவது, ஆறுவது வாசித்துக்கொண்டிருக்கும்போதே திருமணம் நடந்துவிடும். பெண்ணின் வயதும் அதற்கு ஏற்றதாகத் தானிருக்கும். பெண், மரப்பாச்சி வைத்து விளையாடிக் கொண்டிருப்பாள். பையன் கிட்டிப்புள் விளையாடிக்கொண்டிருப்பான். சில சமயம் இருவரும் சேர்ந்தே "பாண்டி" விளையாடுவதுமுண்டு. வெட்கமென்பதே சிறுகுழந்தைகளாதலால் தெரியாது. "அவன் உன் அகமுடையான், அவனுடன் நீ விளையாடக்கூடாது" என்றெல்லாம் வெட்கத்தை உண்டாக்குவார்கள்; புத்திமதி சொல்லுவார்கள்.

ஏன்? அவ்வளவுதூரம் போக வேண்டும்? சாரதா சட்டத்திற்குப் பயந்து, குடும்ப வழக்கத்தைவிட மனமில்லாதவர்கள் இப்பொழுதும், வயதாகாத பெண்ணுக்கும், பையனுக்கும், புதுச்சேரி போன்ற பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலில்லாத, ஊர்களுக்குப்போய் கல்யாணத்தை நடத்துவது கண்கூடு. ஆதலால் அந்தக்காலத்தில் பன்னிரண்டு மாதத்தில் தங்கத்துக்கும் மணம நடந்தது அதிசயமல்லவே!

* * *

பி.ஏ. யில் கோட்அடித்துவிட்டு வீட்டில் சும்மாயிருந்தேன். தங்கம் வீட்டிற்கு வந்தாள். அவள் வந்த அதிர்ஷ்டம், அல்லது அவளது போதாதகாலம், "ரங்கூன் ஆயில் கம்பெனி" என்ற பிரபல கம்பெனியில் மானேஜர் வேலை எனக்குக் கிடைத்தது. இருநூறு ரூபாய் சம்பளம்.

ஆனால் என் தங்[illegible]க்கோ நான் ரங்கூன் செல்வதி[illegible] கொஞ்சமும் இஷ்டமில்லை. இந்[illegible] வேலையில்லையானால் வேறு ஏதா[illegible] பார்த்துக் கொள்ளலாம் என்[illegible]. கடலைத் தாண்டி செல்வது [illegible]காபாவம். பிராயச்சித்தம் செ[illegible] கொள்ள வேண்டுமென்றெல்ல[illegible] பெரியோர்கள் சொன்[illegible]ர்கள். நல்லது, கெட்டது என்றால் ஒருநாள், இரண்டுந[illegible] பிரயாணமா? கண்[illegible]ணுத தேசம், மிலேச்ச தே[illegible] என்றனர். போதாக்குறைக்கு [illegible]கம் வேறு நாலுமாத கர்ப்பிணி. என் தந்தை, நான் போகக்கூடாதென்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். நான் ரங்கூன் போயே தீருவேன் என்று ஒற்றைக்காலில் நின்றேன். நாமாக செலவு செய்துகொண்டு தூர தேசமான ரங்கூனுக்குப் போகப் போவது கிடையாது, தானகக் கிடைக்கும் இந்த சந்தர்ப்பத்தை ஏன் நழுவவிடவேண்டும்? பல இடங்களுக்குப் போய் வந்தால் தானே உலக அனுபவம் ஏற்படும்" என்று என் தந்தையிடம் எடுத்துச் சொன்னேன். தாயில்லாப் பிள்ளை நான். அதிலும் ஒரே பிள்ளை. செல்வமாக வளர்த்துவிட்டார். ஆகவே என் மனம் கோண அவர் நடக்கவில்லை. "சரி! அப்பா! உன் இஷ்டப்படி போய்வா! தெய்வம் தான் உன்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று "ஊன்றுகோலை இழக்கும் குருடனைப் போல" மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், விடை கொடுத்தார்.

"ரங்கூன் சென்று, நல்ல வீடு பார்த்தபிறகு தந்தையையும், தங்கத்தையும் அழைத்துப் போவதாகச் சொல்லி விடை பெற்றுப் போனேன்.

"......எங்களுடன் ஆங்கிலத்தில் சரியாகப் பேசி......"

"..................இதோ பார் யார் வந்திருக்கார்னு.................."

ஆடவர்களைக்கண்டாலே, ஓடி ஒளிந்துகொள்ளும் நாட்டுப்புறப் பெண்களையே கண்ட எனக்கு ரங்கூன் போன்ற பட்டணத்தில், பெண்கள் கூச்சமின்றி, டிராமிலும், பஸ்ஸிலும், ரெயிலிலும் ஆடவர்களுடன் செல்வதைப் பார்க்க முதலில் ஆச்சரியமாயிருந்தது. 'சிவராத்திரி'க்குக் கண்விழிக்கவோ அல்லது ராமாயணம், மகாபாரதம் போன்ற தெருக்கூத்து நாடகம், சினிமா முதலியவைகளுக்கின்றி கிராமத்தில் ஸ்திரீகள், களியாட்டங்களுக்குச் செல்லாதபோது, ரங்கூனில் புருஷர்களுக்கு சமமாய் நாடகங்களுக்கும், இன்னும் மற்ற இடங்களுக்கும் பெண்கள் செல்வது எனக்கு அதிசயமாயிருந்தது. ஆனால் நான் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோதிலிருந்தே, ஆண்களைப் போல, பெண்களுக்கும் எல்லா துறைகளிலும் சமத்துவம் கொடுக்கவேண்டும்; ஆணுக்குப் பெண் அடிமையில்லை. வாழ்க்கையென்ற படகை செலுத்த பெண் ஆணுக்கு துடுப்புபோல; வீணே விவரிப்பானேன். "மாதர் தம்மை இழிவு செய்யும், மடமையைக் கொளுத்துவோம்' என்ற பாரதியாரின் கொள்கையை உடையவனாதலால் ரங்கூன் வாழ்க்கை எனக்கு நிரம்பவும் பிடித்திருந்தது.

அவ்வூர் வாசம் என்னை முற்றிலும் புது மனிதனாக மாற்றியது. பட்டிக்காடு. கர்நாடகம், நாட்டுப்புறம், சுத்த கட்டுப் பெட்டி, என்றெல்லாம் தங்கத்தை வெறுக்கவும் தொடங்கினேன். ரங்கூனில் பெண்கள், நாகரீகமாக, சகஜமாக, சங்கோஜமின்றி யாருடனும் கல கலப்பாகப்பேசுவதையும், அவர்களின்நடையுடை பாவனைகளையும், காணக் காண உண்மையிலேயே தங்கத்தைக் கடுகளவும் பிடிக்காமல் போய் விட்டது எனக்கு.

ராம்குமார் எனக்குக் கீழே வேலைசெய்யும் உதவி மானேஜர். நாளடைவில் இருவரும் இணைபிரியாதநண்பரானோம்.நானே பெரிய சங்கோஜி. யார் வீட்டிற்கும் அதிகம் போவதுகிடையாது.ராமுவின் பலவந்தத்தினால் இரண்டு தடவை அவன் வீட்டிற்குச் சென்றேன். அந்த சமயங்களில் தான் மீனாவை நான் சந்தித்தது. அவளின் 'துரு துரு' என்ற கண்களோ; சுறு சுறு"ப்பான கண்களோ, அல்லது "குறு குறு" என்ற கண்களோ எப்படி அழைத்தாலும் சரி, அந்த புன்னகை தவழும் கண்கள் என்னைக் காந்தம்போலக் கவர்ந்தன. மா நிறம் தான். ஆனால் களை நிறைந்தது. உயிரில்லாத, கல்லாலான சிலைகளிடமே சில சமயம் நாம் மயங்கி நிற்பதில்லையா? பல கோணங்களில் நின்று, தன் கற்பனைக் கண்கொண்டு, பார்த்துப் பார்த்து, சிற்பியால் செதுக்கப்பட்ட அத்தகைய அழகு பிம்பத்தைப்போலிருந்தாள் அவள். அவள் எங்களுடன் சரியாக ஆங்கிலத்தில் பேசிப் பழகி வந்தது இன்னும் என்னை ஆட்டி வைத்தது. மீனாவை ராமுவின் மனைவி என்று எண்ணியிருந்தேன். நாம் செய்யாத பாக்கியத்தை அவனுவது செய்திருக்கிறான் என்று எண்ணினேன்.

திடீரென்று ஒரு நாள் ராமு "மீனாவை உனக்குக் கல்யாணம் செய்துகொடுக்கலாமென்று பார்க்கிறேம், நீ என்ன சொல்கிறாய்" என்று கேட்டான். அப்பொழுது தான், அவள் தன் தங்கை என்று அவன் சொன்னான்.

நான் திணறினேன் பதில் சொல்லத் தெரியாமல். நானோ மணமாய், ஒரு குழந்தைக்கு தகப்பனாய் இருக்கிறேன். ஆனால் மீனாவின் மோகனப்புன்னகை என்னை வாட்டி, வதைத்துக்கொண்டிருந்தது. அறியாப்பருவத்தில் பெற்றோர்கள் விவாகம் செய்து வைத்திராவிடில் நம் விருப்பப்படி மணம் செய்துகொண்டு, மகிழ்ந்து வாழலாமே என்று எண்ணி எண்ணி மாய்ந்தேன். சமூகமாம்! கட்டுப்பாடாம்! பழக்க வழக்கங்களாம்! பால்ய விவாகமாம்! அது ஒழிய வேண்டும். தானாக பழுத்த பழத்திற்கு இனிமை தனி. தடியால் அடித்துப் பழுக்க வைக்கப்பட்ட பழத்திற்கு அத்தனை ருசி கிடையாது. பின்னதைப்போல் 'பால்ய மணம்' என்பதை அறிவுள்ளோர் சிந்திப்பதில்லை. ஒவ்வொருவரும் நினைவு

தெரிந்தபின், அவரவர்களுக்கு இஷ்டமானவர்களை மணந்து கொண்டு வாழ்க்கை நடத்தினால் தான் இன்பமாக வாழமுடியும். அத்தகைய ஆனந்த வாழ்க்கைக்கு அடிகோலாத, சந்தர்ப்பமளிக்காத, இன்னும் பூர்வ குடிகள்போல, அநாகரிகமான, பழக்க வழக்கங்களை, கால நிலைமைக்கு ஒப்ப, திருத்தி அமைக்காத சமுதாயம் இருந்தால் என்ன? மண்ணாய்ப்போனால் தான் என்ன?

நம் வாழ்க்கைப் பாதையில் முள்ளெனத் தோன்றினாளே! பெயரைப்பார் பெயரை? தங்கமாம்! தங்கம்! பாதகி! எனக்கென்று ஏன் படைத்தான் அவளை இக்கபோதிக் கடவுள். பாரமாய் வந்து தொலைந்தாளே நமக்கு! என்று பலவாறாகத் திட்டினேன்.

மீனாவின் மேலிருந்த மோகம், என்ன சொல்கிறோம், செய்கிறோம் என்று சிந்திக்க இடம் தரவில்லை. வஞ்சனை உதித்தது மனதில். என்னை மனமறியப் பொய் சொல்லத் தூண்டியது. "சிறுவயதிலேயே எனக்கு விவாகம் நடந்து மனைவி இறந்துவிட்டாள். இரண்டாவது தாரமாக உன் தங்கையைக் கொடுப்பதில் உனக்குச் சம்மதமானால் எனக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை'' என்றேன்.

ராமு சம்மதித்தான். மீனாவிற்கும் இதில் விருப்பமே. "தூர தேசமானதால் பந்துக்களை வரவழைப்பது முடியாது சிநேகிதர்களை, தெரிந்தவர்களை வைத்துக் கொண்டே கல்யாணத்தை நடத்தி விடுவோம்'' என்று சொன்னேன். ஆகவே ஒருவித இடையூறுமின்றி மீனா எனக்கு மனைவியானாள்.

மூவாண்டுகள் சென்றன. என் தந்தையோ எனக்குக் கடிதம் எழுதிக்கொண்டேயிருந்தார். குழந்தை சுந்தரேசன் விளையாடுவதையும் 'அப்பா' 'அம்மா' "தா...தா'' என்று அவன் கூப்பிடும் அழகையும், தங்கத்தையும், தன்னையும் அழைத்துப் போகும்படியும் ஒவ்வொரு கடிதத்திலும் எழுதினார். நானும் வீடு சௌகரியமாக அகப்படவில்லை. ரங்கூனிலேயே இருக்கும் வேலையாயில்லை இவ்வேலை; அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. நிலையாக ஒரே இடத்தில் வேலையில் வைக்க இன்னும் கொஞ்ச நாள் செல்லும், அது இது என்று ஏதோ சாக்குகள் சொல்லி எழுதினேன். அவர்களை அழைத்து வருவதைப்பற்றிமட்டும் எழுதவில்லை.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த என் பிதா '......தேதி கப்பலில் வருகிறேன். கப்பலடிக்கு வரவும்'' என்று தந்தி கொடுத்தார். அதைக் கண்டதும் நான் திகைத்துப் போனேன். இம்மாதிரி நேருமென நான் கனவிலும் கருதவில்லை.

கப்பலடிக்குப் போனேன். தந்தை மாத்திரம் வந்திருந்தார். அதுவே பாதி சுமையை இறக்கினதுபோலிருந்தது. தங்கம் வராதது என் பாதிக் கவலையைப் போக்கியது. தூர பந்து ஒருவர் வீட்டில் தங்கத்தை விட்டுவிட்டு வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

நானும் என் தந்தையும்உள்ளே நுழைந்தபோது 'அப்பா' என்று ஓடி வந்து கமலா, காலைக் கட்டிக் கொண்டாள். வயது ஒன்றரை அவளுக்கு. கீழே குனிந்து அவளை தூக்கிக்கொண்டு "இதோ! பார்! யார் வந்திருக்கான்னு? தாத்தா வந்திருக்கா பார்'' என்றேன். நான் இப்படிச் சொன்னதும் ஏதோ, உறவுமுறை தெரிந்து விட்டவள்போல 'தாத்தா' என்று சிரித்துக்கொண்டே கமலா தாவினாள் என் தந்தையிடம்.

உள்ளே சென்று அமர்ந்ததும் மீனா வந்து நமஸ்கரித்தாள். "அப்பா! உங்கள் மருமகள் நமஸ்கரிக்கிறாள். ஆசீர்வாதம் செய்யுங்கள்'' என்றேன்.

ரகுவின் அப்பாவிற்கு ஊரிலிருந்து புறப்படும்போது ஒன்றும் எண்ணத் தெரியாமல் காரணமின்றி மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது என்னவோ வாஸ்தவம்தான். ரகு இரண்டாவது விவாகம் செய்துகொண்டிருப்பது அப்போது அவருக்குத் தெரியாது. ரதியைப்போன்ற, லக்ஷ்மியையொத்த ஒரு பெண் வந்து நமஸ்கரிக்கும்போது யாரால்தான் ஆசி கூறாமலிருக்கமுடியும்? ஆகையால் அவரும் ஆசி கூறினார். மனப்பூர்வமாகவே தான்.

தந்தை வந்ததுமே விசாரணையை எதிர் நோக்கியிருக்கும் குற்றவாளியைப்போலானேன். 'முதல் மனைவி இறந்துவிட்டாள்' என்று ராமுவிடம் ஒரே அபாண்டமாக சாதித்திருந்தேன். அதை நிஜமென்றே மீனாவும் நம்பிக்கொண்

"...தன் கரங்களால் மோட்டாரில் மோதாதபடி......"

டிருந்தாள் இன்றுவரை. தகப்பனார் வந்ததால் விஷயம் அம்பலத்துக்கு வரப்போகிறது. குற்றமுள்ள என் நெஞ்சு மிகவும் சஞ்சலப்பட்டது.

* * * * *

"நான் ஒருவன் உயிரோடு இருக்கிறேன் என்ற எண்ணமில்லையே உனக்கு ரகு. பெற்ற தகப்பனுக்கு, ஒரு பத்திரிகைகூட அனுப்பாத பிள்ளையை இப்போதுதான் பார்க்கிறேன்."

'இப்பூசலுக்குத் தயாராயிருந்த நான் "பத்திரிகை அடிக்கபோது இருந்தான்னா அனுப்ப' என்றேன்.

'வேடிக்கையாகத்தானிருக்கு நீ சொல்வது' என்று கேலி சிரிப்போடு "பத்திரிகைதான் அடிக்கவில்லை, கல்யாணம் ஆகிவிட்டது; ஆனபிறகாவது ஒரு வரி எனக்கு எழுதினாயா?"

"எழுதினால் மனவருத்தம்' வீண் மனஸ்தாபம்."

"எழுதாததினால் மட்டும் இப்போது மனவருத்தமில்லையோ? அந்தப் பெண் தங்கத்தை என்ன செய்வதாக உத்தேசம்."

"நீங்களே சொல்லுங்கள்."

"நான் என்ன, பெரிய மனிதன் உனக்குச் சொல்ல இருக்கு?"

"நீங்களாகப் பார்த்து, கல்யாணம் செய்துவைத்த பெண்தானே, அப்பா?' என்றேன் குத்தலாக.

"இல்லையானால் 'காதல் மணம்' 'ரிஜிஸ்டர் விவாகம்' 'புனர் மணம்' என்று ஓடிப்போய் நீயாகப்பார்த்து செய்து கொள்ளவில்லை, மூன்றாவது நாள், 'விவாகரத்து' வழக்கு தொடரவில்லை என்கிறாயோ? உன்னைப்போல் இன்னும் சிலர் கிளம்பினால், நம் ஹிந்து தர்மம், கலாசாரம் எல்லாம் கூடிய சீக்கிரத்தில் நசித்துவிடும். தங்கம் உன்னோடு வாழாமலிருக்க வேண்டியதுதானா?"

"என் மனசுக்குக் கடுகளவும் பிடிக்காத ஒருத்தியோடு, நான் சிறு வயதில் என்னது செய்கிறோம் என்று தெரியாமல், தாலி கட்டின தவறுக்காக, எப்படி இருந்து வாழமுடியும்? நீங்களே சொல்லுங்கள்!"

"தோளுக்கு மிஞ்சினால் தோழன்! என் மரியாதையை



"..................இவர்தான் உன் தகப்பனார் சுந்து.................."

நான்தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அரை குறை படிப்பு படித்து, கண்மூடி கபோதிகளாயிருக்கும் உன் போன்றவர்களோடு பேசிப் பயனில்லை. அந்தப் பெண் செய்த பாபம், உன்னைத் தேடி வாழ்க்கைப்பட்டாள். கடைசியாகச் சொல்லிவிடுகிறேன். பெண் பாவம் பொல்லாது. அதற்கு ஏற்ற தண்டனையை நீ கட்டாயம் அனுபவிப்பாய். அவளுக்கு மாதா மாதம் செலவுக்காவது பணம் ஏதாவது அனுப்பு" என்று சொன்னார். அத்துடன் தங்கத்தைப்பற்றிய பேச்சு முடிந்தது.

இதற்குப் பிறகு என் தந்தை பத்து நாள்கூட இருக்கவில்லை. இத்துக்கத்தினாலேயே உயிர் துறந்துவிட்டார். அவர் சொற்படி என் மூத்த மனைவிக்கு அனுப்பி வைத்த ஐம்பது ரூபாய் என்னிடமே திரும்பி வந்துவிட்டது. விலாசம் சரியாகத் தெரியாதபடியால் என்னால் மேலே ஒன்றும் செய்ய முடியவில்லை.

இதன் பின்னர் ஒரு ஆண்டு ஓடி மறைந்தது. எங்கள் நிம்மதியான வாழ்க்கையைக் குலைக்க வந்தது ஜப்பானியர்களின் படையெடுப்பு. பிரிட்டிஷ் சேனைகளும் காலி செய்ய ஆரம்பித்ததும் இந்திய மக்கள் எல்லோருமே பீதியால் கூட்டம் கூட்டமாக போட்டது போட்டபடி கிளம்பினர். கப்பலிலும் விமானத்திலும், கிடைத்த போக்குவரத்து சாதனங்களில் கிளம்பினர். ஒருவித வசதியும் கிடைக்காது பல்லாயிரக்கணக்கான மக்கள், கால் நடையாகப் பிறந்த நாட்டை நோக்கிப் பிரயாணமானார்கள். நானும் மீண

வுடனும், கமலாவோடும் கால் நடையாகப் புறப்பட்டேன். ராமு கம்பெனியைப் பார்த்துக்கொள்வதற்காக, நிலைமை மோசமாகும் வரை இருப்பதாகத் தீர்மானித்தான். நாங்கள் கிளம்பினோம். ஒரு மைலா? இரண்டு மைல்களா? இல்லை, இருபது மைல்களா நடப்பதற்கு? உணவு இன்றி தண்ணீரின்றி, கிடைத்ததைத் தின்றுகொண்டு, நடந்தோம், நடந்தோம், வழி மாளவேயில்லை. கண்டதைத்தின்று, அகப்பட்ட பானத்தைக் குடித்ததால், மீனுவிற்கு வாந்தி, பேதி கண்டது. அதோடு போராடக்கூடிய தேக நிலைமையிலில்லை அவள். டாக்டரை எங்கு தேடுவது? வைத்தியம் எங்கு செய்வது? நானும் கமலாவும், ஒன்றும் செய்ய முடியாமல், அவள் இறப்பதை கல்லாய் சமைந்து பார்த்துக்கொண்டிருந்தோம். என்ன செய்வது? விதியின் சதி. என் தந்தையின் சொல் வீண்போகவில்லை. அவரிட்ட சாபம் பலித்தது.

* * * *

"என்ன ஸார்? ரோட்டைக் கடக்கும்போது, அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டு, குழந்தையைக் கையோடு பிடித்துக் கொண்டுபோக வேண்டாம்" என்று வலிவுள்ள தன் கரங்களால் என்னையும் மோட்டாரில் மோதிக்கொள்ளாதபடி பிடித்துக்கொண்டு, குழந்தை கமலாவையும் அலாக்காக தூக்கிக்கொண்டான் ஒரு வாலிபன்.

"அரை நிமிஷம் ஸார்! நான் பார்த்திராதிருந்தால், மோட்டார் அப்படியே உங்கள் இருவரையும் அறைத்திருக்குமே" என்றான் அவ்வாலிபன்.

என்னைக்காப்பாற்றிய வாலிபன் சுந்தரேசன். நான் தங்கத்தைத் தேடிக்கொண்டிருந்தபோது நடந்தது இச்சம்பவம். சுந்தரேசனுக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டு, அந்தத்தெருவில் 15-நெம்பர் வீடு எது என்று கேட்டேன்.

"ஏன்? அது எங்கள் வீடுதான்? யாரைப்பார்க்க வேண்டும்?" என்று கேட்டான் சுந்தரேசன்.

"அங்கே தங்கம்மாள் என்று யாராவது இருக்கிறார்களோ?"

"அந்த அம்மாள் என் தாயார் தான்? நீங்கள் யார்? என்ன வேண்டும் அந்த அம்மாளுக்கு?" "வீட்டிற்கு வாருங்கள் போவோம். எல்லாம் விவரமாகச் சொல்கிறேன்"

வீட்டிற்குப்போனோம். எங்களை உட்கார வைத்துவிட்டு உள்ளே எங்கள் வரவை தன் தாயாரிடம் சொல்லச்சென்றான் சுந்தரேசன்.

எப்படிபேச்சை துவக்குவது? பல ஆண்டுகளாக பார்க்காமலே இருந்துவிட்டு, நான் தான் 'உன் கணவன்' என்று எப்படி உறவு கொண்டாடுவது? கேலி செய்யமாட்டார்களா? நம்பத்தான் நம்பி விடுவார்களா சுலபத்தில்? தடியைத் தூக்கிக்கொண்டு யாராவது அடிக்கவந்துவிட்டால்? ஒருவித ருசுவும் இன்றி, நெருங்கிய உறவினரும் உடன் இன்றி எப்படி தங்கத்தை நம்பச்செய்வது என்று நான் சஞ்சலப்பட்டு, யோசித்துக்கொண்டிருந்தபோது அங்கே கூடத்தில் ஒரு போட்டோ, மாட்டியிருந்தது கண்ணில் பட்டது. பாதிக்கவலையைத்தீர்த்தது அது. திரும்பி சுந்தரேசன் வந்ததும் அந்த போட்டோவிலிருப்பது யார் என்று கேட்டேன். "அது என்னுடைய தாயும், தந்தையும்; என் தகப்பனார் ரங்கூனுக்குப் போகுமுன் எடுத்தது" என்றான்.

அதற்குள் உள்ளேயிருந்துவந்த அவன் தாயார் தங்கம் "இவர் தான் உன் தகப்பனார் சுந்து. எத்தனை வருஷமானாலும், கட்டினபுருஷனை மறந்துபோகுமா?" என்று நமஸ்கரித்தாள்.

என்னுடைய சங்கடம் நொடியில் தீர்ந்துவிட்டது. செப்பிடு வித்தைக்காரன், போட்ட முடிச்சுக்களை, சிறிதும் சிரமமின்றி எப்படி அவிழ்த்து விடுகிறானோ, அப்படியே வாழ்க்கையில் எதிர்பாராது இன்னல் களைத்தோற்றுவிக்கும் பரம்பொருள் அவைகளைக் களையும் போது, அதி அற்புதமாக, ஆச்சர்யப்படும் விதம் களைந்து நம்மை எல்லையில்லா ஆனந்தத்தில் மூழ்குவிக்கும் திறமையை என்னென்பது?

"விதியின் கூத்தால் இவ்வளவும் நடந்த விட்டது தங்கம். என்னை நீ மன்னிக்கவேண்டும். கமலா தாயை இழந்தபெண். உன்னுடைய பெண்ணாக இன்றையிலிருந்து கொள்ளவேண்டும்" என்றேன்.

வாரி அணைத்துக்கொண்டாள் கமலாவைத் தங்கம். தங்கமே தான் அவள்.

பால்யத்தில்மணந்துக்கொண்ட மனைவியை வெறுத்து நான் மீனுவை, ஆசையோடு கைபிடித்தேன். ஆனால் தெய்வம் அதை விரும்பவில்லை. அற்பாயுளில் கொண்டுபோய்விட்டது அவளை. திரும்பி முதல் மனைவியிடமே நான் வரவேண்டி வந்தது. இதற்குப் பிறகுதான் சமூகக் கட்டுப்பாட்டை நொந்துகொள்வதில் பயனில்லை. விதியென்று மனிதனுக்குக் கட்டுப்படாத சக்தி ஒன்று அலாதியாக இருக்கிறது. நாம் செய்துவிடும் சீர்திருத்தங்களால், சட்டங்களால், அதை மசிய வைத்துவிட முடியாது என்று அறிந்தேன்" என்றார் ரகுராமன்.

'இதுதான் 'பகற் கன'வின் முடிவு. பலிக்காத கனவு என்று இதை அசட்டை செய்யக்கூடாது. பலித்துவிட்டால் எப்படியிருக்கும் என்று சிந்திப்பதே அறிவுடமை. இரவிலே காணும் கனவிலேயே பலிக்கும் கனவு இது, பலிக்காத கனா இது என்று திண்ணமாய்ப் பாகுபடுத்தி யாராலாவது சொல்ல முடியுமா? இராக்கனுவின் கதியே அப்படியானால் பகற்கனவை பலிக்காத கனவென்று எங்ஙனம் சொல்லக் கூடும்? மேலும் மூட்டைப் பூச்சி உபத்திரவத்தால், வேறு பல காரணங்களால் இரவெல்லாம் தூங்க முடியாமல் பகலிலேயே துயில வேண்டி வருகிறது. அதனால் ராத்திரியில் வரவேண்டிய சொப்பனமும், பகலிலே தானே வரும்? ஆகவே கனவு பகலில் கண்டது ஆனாலும் இராச்சொப்பனமென்றே கொள்ள வேண்டும். ஆதலால் இது பலிக்கவும் பலித்துவிடும், நான் பிரதம மந்திரியானால், இல்லை சர்வாதிகாரியானால் பிரயோஜனமில்லை. ஏனென்றால் ஒரு வருடங்கூட முழுசாக அப்பதவியில் நிம்மதியாய் இருக்க விடமாட்டேன் என்கிறார்களே! அதனால் தான் சர்வாதிகாரி என்றது.

—❀—

3

'தெய்வம் மணக்கும் செய்யுள்'

★

பி. ஸ்ரீ.

டாக்டர் சாமிநாதையரின் ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பெரிய புராண ஆசிரியரான சேக்கிழார் விஷயமாக ஒரு 'பிள்ளைத் தமிழ்' நூல் இயற்றியிருக்கிறார். அதன் ஒருசெய்யுளில் சேக்கிழார் சுவாமிகளின் ஊராகிய பழைய குன்றத்தூர் பின் வருமாறு வருணிக்கப் படுகிறது:

சோறு மணக்கும்
மடங்களெலாம்;
தூய்மை மணக்கும்
சிந்தையெலாம்;
சுவணம் மணக்கும்
ஆடையெலாம்;
தொங்கல் மணக்கும்
தோள்களெலாம்,
சேறு மணக்கும்
கழனியெலாம்
செல்வம் மணக்கும்
மாடமெலாம்;
தென்றல் மணக்கும்
மேடையெலாம்;
தெய்வம் மணக்கும்
செய்யுளெலாம்;
நீறு மணக்கும்
நெற்றியெலாம்;
நெய்யே மணக்கும்
கறிகளெலாம்
நெருப்பு மணக்கும்
குண்டமெலாம்;
நேயம் மணக்கும்
வீதியெலாம்;
சாறு மணக்கும்
குன்றத்தூர்த்
தலைவா! தாலே
தாலேலோ,
சகலா கமபண்
டித தெய்வச்
சைவா! தாலே தாலேலோ.

[சுவணம்—ஸ்வர்ணம், அழகிய வர்ணம். தொங்கல்; மாலை-குண்டம்—யாக குண்டம். சாறு—திருவிழா.]

சேக்கிழார் வாழ்ந்த அக்காலக் குன்றத்தூரில் மானஸிக யாத்திரை செய்யும் மகா வித்துவான், அடியார்களுக்கும் விருந்தினர்களுக்கும் அன்புடன் விருந்தளிக்கும் மடாலயங்களையும், உணவுப் பொருள்களை விளைவிக்கும் கழனிகளையும், செல்வம் நிறைந்த மாடமாளிகைகளையும், அம் மாளிகைகளில் தென்றல் உலாவும் மேடைகளையும், யாககுண்டங்களையும், நேசத்துடன் மக்கள் நடமாடும் வீதிகளையும் பார்க்கிறார். அவ்வீதிகளிலும் வீடுகளிலும் வேள்விச் சாலைகளிலும் மடங்களிலும் வயற்காடுகளிலும் பொன்னுடையும் பூமாலையும் அணிந்த மேனிகளையும், நீறு திகழும் நெற்றிகளையும், தூய்மை மணக்கும் சிந்தைகளையும் பார்க்கிறார். 'பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' அல்லவா? இப்படி முகத்தோடு அகத்தையும் பார்த்து நித்திய விழாக்கொண்டாடும் அவ்வூரையும் அவ்வூர்த் தலைவரும் சகலாகம பண்டிதருமான சேக்கிழார் சுவாமிகளையும் உத்ஸாகமாய்ப் பாடுகிறார்.

அவ்வூர் வாசிகள் அருட் செல்வர்களாகவும், பொருட் செல்வர்களாகவும் காணப்படுகின்றனர். அங்கே யோகமும் போகமும் ஒருங்கே காட்சியளிப்பதுபோல், நீறு மணக்கும் நெற்றியர், தூய்மை மணக்கும் சிந்தையர், நெய் மணக்கும் சோறு கறிவகைகளை உண்டு, தென்றல் மணக்கும் மாடமாளிகைகளில் வாழ்க்கை நடத்துகிறார்களாம். 'சோறு மணக்கும் மடங்கள்' யோக நிலயங்களாகவும், கலாநிலயங்களாகவும் பக்தியின் வளர்ப்புப் பண்ணைகளாகவும் திகழ்கின்றன.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் இந்த மானஸக் காட்சி, சேக்கிழார் காலத்து நாகரிகமாட்சிக்குப் பொருத்தமானதுதான். சேக்கிழார் பாடும் மெய் விளங்கிய அன்பர்களின் தலைவராகிய திருஞான சம்பந்தர் பாடல்களிலும் இத்தகைய நாகரிக மாட்சிக்குச் சான்று கிடைக்கிறது.

செல்வ நெடுமாடம்
சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச்
செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச்
சிற்றம் பலம்மேய
செல்வன் கழல்ஏத்தும்
செல்வம் செல்வமே.

[சேண் ஓங்கி—வானளாவி. செல்வமதி — செல்வமான சந்திரன். தில்லைச் சிற்றம்பலம் — சிதம்பரம் மேய — மேவிய, பொருந்திய. கழல் — திருவடி.]

என்ற திருஞான சம்பந்தரின் பாட்டைப் பாருங்கள். இந்த அதிசய ஞானச் சிறுவரின் இச் சின்னஞ்சிறு செல்வக் கவிதையில், கி. பி. ஏழாம் நூற்றூண்டு முதல் பதிமூன்றும் நூற்றூண்டு வரை வளர்ந்தோங்கிய தமிழ் நாகரிகத்தின் மாட்சியும் சிறப்பியல்பும், ஓர் அதிசய மந்திரக் கண்ணுடியில் பிரதிபலிப்பது போல் பிரதிபலிக்கக் காண்கிறேம்.

வானளாவிய மாளிகையொன்றில் கூனிக்குறுகிய உள்ளத்தைப் பார்ப்பதைக்காட்டிலும், ஒரு குடிசையில் வானளாவிய இதயத்தைப் பார்ப்பது எவ்வளவு சிறப்பானது! — என்றுர் ஓர் ஐரோப்பிய ஞானி. ஞான சம்பந்தரோ வானளாவிய மாளிகைகளில் வானளாவிய இதயங்களைப் பார்க்கிறுர். அருட்செல்வத்தோடு அறிவுச் செல்வத்திலும் பொருட் செல்வத்திலும் நிகரற்று விளங்கும் உண்மைச் செல்வர்களைப் பார்க்கிறுர். சிந்தையின் நிறைவாகிய, சிந்தையின் விசாலமாகிய செல்வத்துடன் இசைந்து பயன்படும் பொருட் செல்வத்தையும் பாராட்டுகிறுர். இத்தகைய 'மெய்த்திரு'வைப் பாராட்டியது தமிழகம்.

இத்தகைய செல்வ நெடுமாடம் ஒன்றில், குன்றத்தூரிலே சேக்கிழார் வாழ்ந்தாரென்று கருதலாம். இவர் வீடு இருந்த இடத்திலேதான் இப்போது சேக்கிழார் கோயிலும், அதைச் சுற்றியதோட்டக் கொல்லைபிடமும் காணப்படுகின்றன என்கிறுர்கள். அந்நாளிலே குன்றத்தாரில் தேவாரம் முதலான சைவத் திருமுறைகள் பெரிதும் வழங்கி வந்தன என்றும், அப்பாடல்களைக் கேட்டுக்கேட்டு அவற்றில் ஊறிப் போன சேக்கிழாரின் உள்ளம் தொண்டர் புராணம் என்ற பெரிய புராணத்தை இயற்றிச் சைவத் திருமுறைகளைப் பன்னிரண்டாகப் பூர்த்தி செய்தது என்றும் கருதலாம். இக்கருத்தைத்தான் குறிப்பாக மகாவித்துவான் மீனுட்சிசுந்தர பிள்ளை மேலே காட்டிய பிள்ளைத் தமிழ்ப் பாட்டில்,

தெய்வம் மணக்கும்
செய்யுளெலாம்

என்று குறிப்பிட்டுச் சேக்கிழார் ஊரைச் சிறப்பிக்கின்றூர். தெய்வம் மணக்கும் செய்யுள்களுக்கிடையே தோன்றியத் திகழ்ந்த சகலாகமபண்டிதரைத் 'தெய்வச் சைவா!' என்று போற்றுகிறுர் மகாவித்துவான்.

பன்னிரண்டாவது திருமுறையாகிய பெரிய புராணம் மற்றத் திருமுறைகளையெல்லாம் அங்கங்களாகக்கொண்டு ஒளிர்கின்றது என்பர் அடியார்களின் வரலாறுகளைக்கூறும்பெரியபுராணத்திலே மற்றைத் திருமுறைகளின் தோற்றம் முதலான வரலாறுகளையும் காணலாம். இத்தகைய பெரியபுராணச் செய்யுளையும் 'தெய்வம் மணக்கும் செய்யுள்' என்று சிறப்பித்துப் பேசுவதுண்டு.

'தெய்வம் மணக்கும்' பெரிய புராணச் செய்யுள்களைச் சேக்கிழார் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடியிருக்கிறுர் என்று கூறுவது பொருத்தமானதுதான். இயற்கையழகுகளையும் பக்திக் கண்ணுல் பார்க்கிறவர் சேக்கிழார். உதாரணமாகக் காவிரியாற்றின் வருணனை ஒன்றைப் பார்க்கலாம். சிலப்பதிகாரத்திலும் காவிரியாறு வருணிக்கப்படுகிறது. அந்த ஆசிரியர் கவிதைக் கண்கொண்டுதான் காவிரியை நோக்குகிறுர். சேக்கிழார் கண்களிலோ காவிரியும் ஒரு சிவ பக்தராகிவிடுகிறது; சோழதேசத்தில் காவிரியின் இரு கரைகளிலும் சிவாலயங்கள் அதிகம். காவிரி வெள்ளமிடும்போது தண்ணீர் அந்த ஆலயங்களையும் வெள்ளக்காடாக்கிவிடக்கூடும். அந்த வெள்ளம் இரு கரையிலுமுள்ள மலர்களையும் அடித்துக் கொண்டு வருவதால், காவிரியும் சிவபெருமானுக்குப் பூவும் நீரும் இட்டு வழிபடுகிறதாம். உள்ளம் நீராக நெகிழ்ந்து பூசிக்கவேண்டும்; ஆஷாடபூதித்தனம் உதவாது என்று அப்பர் பாடியிருக்கிறுர். அப்படித்தானே காவேரியும் பூசிக்கிறது? ஆகவே சேக்கிழார் காவிரியை,

உம்பர் நாயகர்க்(கு)
அன்பரும் ஒக்குமால்

[உம்பர் நாயகர் — தேவ தேவரான சிவபெருமான்.] என்று வருணிக்கிறுர்.

வேறொரு உதாரணம் பார்க்கலாம். காவிரிக்கரை வழியாகச் சோழவள நாட்டைத் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக்கும் அந்தச் 'சேறு மணக்கும் கழனி'களைப் பார்ப்போம். பயிர் பசந்து கதிர் விரிக்கும் அழகைப்பார்க்கலாம் அக் கழனிகளில். ஆனால் சேக்கிழாரின் 'சைவப் பயிர் வளர்க்கும்' மேகமான சேக்கிழாருக்குத்தான் கழனிப்பயிரும் சிவபக்தியை நினைப்பூட்டுகிறது: சுருள் விரித்து நெகிழ்ந்து வளரும் பக்தியுள்ளத்தை நினைப்பூட்டுகிறது. 'தலைத்துக் கழுத்து வளைந்து மணிக் கொத்தும் சுமந்த' அந்த நெற்பயிர், மெய்விளங்கிய சைவ அன்பர்கள் ஒருவரையொருவர் தலை வணங்குவதையும் நினைப்பூட்டுகிறது.

இன்னும் ஓர் உதாரணம். காவிரிக்கரையிலுள்ள பிரபலமான ஒரு சிவஸ்தலத்திலே கிளிகளையும் 'நாகணவாய்ப் பறவை' என்ற மைனுக்களையும் பார்க்கிறுர் சேக்கிழார். கிளிகள் தங்கள் மழலை மொழியில் ஏதோ குழறுகின்றன. அப்போது மைனுக்கள் பேசாமல் சும்மாயிருக்கின்றனவாம், கிளிகள்சொல்வதைக் கேட்டுகொண்டிருப்பதைப்போல், தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவார் ஓத அன்பர்கள் மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருப்பதைச் சேக்கிழார் பார்த்திருக்கிறுர். அத்தகைய அனுபவங்கள் இவருக்குச் சர்வசாதாரணம். ஆகவே, பச்சைக் கிளிகள் தங்கள் மழலை மென் மொழியில் திருப்பதிகங்களை ஓதுவதாகவும், மைனுக்கள் பக்திக்காதலுடன் கேட்பதாகவும் கற்பனை செய்கிறுர் பக்திக்கடலான சேக்கிழார்:

எல்லோரும் சொன்னார்கள். இப்போது அவர்கள் எப்படி இருக்கிறார்கள் பார்? எல்லாம் நாம் நடந்து கொள்வதில் இருக்கிறது. என்னடி ருக்கு, நான் சொல்வது சரிதானே? முதலில் உன் தமையன் அந்த வீட்டுக்குப் போகும்போது அண்டை அயலில் உள்ளவர்கள் என்ன சொன்னார்கள்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ரொம்ப பொல்லாதவள். ஏதாவது சண்டைக்குக் கால் பிராண்டிக்கொண்டேயிருப்பாள். உன் தமையனும், அவன் அகமுடையாளும் ரொம்ப சாதுக்கள் பாவம், அவர்கள் அங்கே போய் ஒரு நிமிஷம்கூட இருக்கமுடியாது. பக்கத்துத் தெரு பட்டுமாமி பலே கைக்காரி என்று பெயர். அவளாலேயே அங்கு இருக்கமுடியாமல் வந்து விட்டாள். பாவம், இவர்கள் போய் அங்கே எப்படி இருக்கப் போகிறார்கள்? இந்த இடம் வேண்டாம். வேறு இடம் ஏதாவது பாருங்கள்' என்றுதான் சொன்னார்கள். எதற்கும் போய் கொஞ்ச நாள் இருந்துதான் பார்ப்போமே என்று போனார்கள். இதுவரை ஒரு சண்டையா, கூச்சலா ஒன்றுமில்லாமல் நன்றாகத்தான் இருக்கிறார்கள். நன்றாக இருப்பதோடு மாத்திரமா? இனி வேறு இடம் கொடுத்தால் கூட அதை விட்டுவிட்டு வரமாட்டார்கள்' என்றாள் ருக்கு.

'நான் தான் சொல்கிறேனே உலகத்திலே கொஞ்சம் என்றால் அதைப்பிரமாதப்படுத்தி விடுவார்கள். ஒன்றுமில்லாமல் தாங்களாகவே கதையும் கட்டி விட்டு விடுவார்கள். கலியாணத்துக்கு வரன் பார்க்கிற கதை மாதிரிதான். இதனால் வீட்டின் சொந்தக்காரர்களையெல்லாம் நான் நல்லவர்களென்று சொல்லி விடவில்லை. கெட்டவர்கள் எத்தனையோபேர்கள் இருக்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. நல்லவர்களும் இருக்கிறார்கள் என்றுதான் சொல்கிறேன். இவ்வளவு சொல்கிறார்களே, பாவம், தாட்சண்யத்துக்கு முதலில் கொஞ்ச நாளைக்கு இடம் கொடுத்தால் வீட்டுக்காரருக்கு அவசியம் ஏற்பட்டு காலி செய்யச் சொன்னால் எத்தனை பேர்கள் காலி செய்யாமல் இல்லாத தொந்திரவுகளெல்லாம் கொடுக்கிறார்கள் தெரியுமா?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஏன் ரொம்ப தூரம்போவானேன்? எங்கள் சித்தப்பாவை எடுத்துக்கொள்ளுங்களேன். முதலில் குடும்பம் சின்னதாக இருந்தது. அவ்வளவு பெரிய இடம் நமக்கு எதற்கு என்று வீட்டில் ஒரு 'போர்ஷனை' வாடகைக்கு விட்டார். அப்பொழுது பசங்களெல்லாம் சின்னதாக இருந்ததுகள், எப்பொழுதும் அப்படியே சின்னதாகவே இருந்துகொண்டிருக்குங்களா என்ன? போன வருஷம் பெரிய பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணினார். இதோ நேற்று தை மாசம் நாட்டுப்பெண்ணை வீட்டுக்கு அழைத்தார். இடம் போதவில்லை. வீட்டைக் காலி செய்யச் சொன்னால் மாட்டேனென்கிறான். 'நான் எங்கே போகிறது? எங்காவது இடம் பார்த்துக் கொடு, மாட்டேனென்று சொல்லவில்லை போகிறேன்' என்கிறான். எப்படியிருக்கிறது நியாயம்? வாஸ்தவமாகவே சொல்கிறேன். இரண்டு, மூன்று மாசமாக சித்தப்பாவுக்கு தெருத் திண்ணையில் தான் சயனம். இதற்கு என்ன சொல்கிறீர்கள்?' என்றாள் சாந்தா.

'இந்தமாதிரி சொல்லப் போனால் இன்னும் அதிவிசித்திரமான சம்பவங்களெல்லாம் இருக்கிறது. மூன்றாவது வீட்டில் நாகநாதஅய்யர் என்று ஒருவர் இருக்கிறாரே, தெரியுமா? என்றாள் வசந்தா.

'மீனா மாமியின் அகத்துக்காரரைத் தானே சொல்கிறாய்? என்றாள் ருக்கு.



"......அங்கேயா போகிறாய், வீட்டுக்காரி ராக்ஷஸி ஆயிற்றே......"



"..................காலிசெய்யமாட்டேன் என்கிறான்................."

'ஆமாம் அவரையேதான் சொல்கிறேன்' என்றாள் வசந்தா.

'அவரைக்கூட வீட்டைக் காலிபண்ணும்படி வீட்டுக்காரன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறானாமே? மீனா நேற்று இங்கு வந்திருந்தாள். குழந்தைக்குக் காதுவலியாக இருக்கிறது, என்ன செய்யலாம் என்று கேட்டுக்கொண்டு போவதற்காக. அப்பொழுது சொன்னாள் இந்த மாதிரி நோட்டீஸ் கொடுத்திருக்கிறான் என்று, என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதைத்தான் சொல்ல வருகிறேன். நாகநாத அய்யருக்கு மாம்பலத்தில் ஒரு சொந்தத்தில் வீடு இருக்கிறதாம். வீடு பெரிய வீடாம். இவருக்கு அவ்வளவு பெரிய வீடு வேண்டியதில்லை. சிறிய குடும்பம. அத்துடன் சம்பளமும் சொற்பம். அந்த வீட்டை மொத்தமாக விட்டால் ஒருவர் அதிகவாடகை தருவதாகச் சொன்னாராம். ஆகவே இவர் அந்த வீட்டை வாடகைக்கு விட்டு இங்கே சொற்ப வாடகையில் ஒரு சிறிய இடம் பார்த்துக்கொண்டு இருந்து வருகிறார். இப்பொழுது திடீரென்று வீட்டுக்காரன் நோட்டீஸ் கொடுத்து விட்டான். இவருக்கு வேறு இடம் அகப்படவில்லை' என்று வசந்தா சொல்லி முடிப்பதற்குள 'ஏன், மாம்பலம் வீட்டுக்குப் போகிறது என்றாள் விமலா.

'அவசரப்படுகிறாயே. மாம்பலம் வீட்டில் வாடகைக்கு இருக்கிறானே, அவனைப்போய்க் கேட்டால், அகமுடையாள் சீக்காய்ப்படுத்துக் கொண்டிருக்கிறாள். பெண் பிரஸவத்துக்கு இருக்கிறாள். இப்பொழுது காலி செய்யவே முடியாது என்று சொல்லி விட்டானாம். அத்துடன் அவன் வெளியில் கொஞ்சம் செல்வாக்கு உள்ளவனாம். நாகநாத அய்யர் திண்டாடுகிறார் பாவம்! எப்படியிருக்கிறது நியாயம்?" என்றாள் வசந்தா.

'எல்லாவற்றையும்விட இது ரொம்ப விசித்திரமாக இருக்கிறதடியம்மா என்றாள் ருக்கு.

'இந்த மட்டோடா இருக்கப் போகிறது? சர்க்கார் சீக்கிரத்தில் இந்த வீட்டுக்கஷ்டத்தைத் தீர்க்காவிட்டால் இன்னும் இதைவிட எவ்வளவோ விசித்திரமான விஷயங்களையெல்லாம் கேள்விப்படத்தான் போகிறோம்,' என்றாள் விமலா.

'சரிதான் இந்தமட்டோடு இது இருக்கட்டும் ருக்கு, உங்கள் தமையன் வீட்டுக்கார மாமியைப்பற்றிச் சொல்வதாகச் சொன்னாயே,' என்றாள் சரோஜா.

'நேரமாகிவிட்டதடி. நாளைக்குச் சொல்கிறேனடி. பெங்களூரிலிருந்து யாரோ சிநேகிதர்கள் வரப் போகிறார்களாம். சொல்லி விட்டுப் போனார். சமையல் வேலையைக் கவனிக்க வேண்டும்' என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள் ருக்கு.



புத்த பிக்ஷுவிடம் சரணுகதி

புத்த பிக்ஷு லோகநாதர் லாஸ்ஏஞ்ஜல்ஸுக்கு (அமெ ரிக்கா) விஜயம் செய்த போது அமெரிக்க மாதர்கள் அவருக்குத் தலைவணங்கி தங்கள் தலைமயிர்மீது அவர் நடந்து செல்ல வேண்டினர்

(கீழ்) பிரிட்டிஷ் கடற்படையினர் ஏற்பாடு செய்த நடனக்களியாட்டத்திற்கு எலிஜபெத் இளவரசி, அவர் கணவன், இளவரசியின் தங்கை இவர்கள் விஜயம் செய்தனர்.

பொய் வாழ்க்கை

டி. எஸ். ஜயராமன் பி.ஏ.

இரு நண்பர்கள் இரவில் ஒரு சத்திரத்தின் திண்ணையில் படுத்து உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவன் களைப்பு மேலீட்டால் சிறிது கண் அயர்கிறான். மற்றொரு நண்பன் இவன் குரல் உளறுவதைக் கேட்டு "என்னடா தூக்கமா?" என்கிறான். தூங்கி வழிந்த நண்பன் "உஷார்" ஆகிக்கொண்டு "இல்லையே" என்கிறான். ஆயிரத்தில் 999 பெயர்கள் இதுமாதிரி சந்தர்ப்பங்களில் தூங்கினதாக ஒப்புக்கொண்டு "ஆம் சிறிது கண்ணயர்ந்தேன்" என்று கூற மாட்டார்கள். இது ஒரு மனோதத்வ உண்மை. இந்த உண்மையை உபயோகப்படுத்தி வெற்றிபெற நினைத்து விசுவாமித்திரர் "அரிச்சந்திரன் சிறிது கண்ணயர்ந்தபோது அரிச்சந்திரா தூங்குகிறாயா?" என்று கேட்டாராம். அந்த மன்னன் "ஆம் ஸ்வாமி. கொஞ்சம் கண்ணயர்ந்தேன்" என்று கூறி மகரிஷிக்குப் பெருத்த ஏமாற்றத்தை யளித்தானாம். அது அரிச்சந்திரன் காலம்.

இன்று நாம் உண்மையை எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கிறோம் என்று ஆராயப்புகுந்தால் நாம் நம் வாழ்க்கையில் பொய் யென்ற படிக்கட்டுகளைப் பரப்பி அவைகள் மேலேயே நடமாடுகிறோம் என்ற உண்மைவிளங்கும். பொய்யையும், களவையும் பிளாக் மார்க்கெட்டையுமே தொழிலாகக் கொண்டுள்ள மகானுபாவர்களைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. அத்தகையவர்களைச் சட்டத்தின் நீண்ட உறுதியான கைகளுக்கு விட்டுவிடுவோம். நியாயமான முறையில், பொய் கலப்பில்லாமல் நாம் தொழில் நடத்தி இந்த உலகத்தில் காலட்சேபம் செய்கிறோம் என்றும், ஒருவர் சொத்தைக்களவாடவில்லை, பொய்பேசி ஒருவரைக் கெடுக்கவில்லை என்றும், மார்தட்டி நிமிர்ந்து நிற்கும் நபர்களுடைய தினசரி வாழ்க்கையை மட்டும் கவனியுங்கள். பொய் எவ்வளவு குறுக்கிடுகிறதென்று ஆராய்ச்சி செய்யுங்கள்.

உதாரணமாக நான் 15 நாள் லீவ் எடுத்துக்கொண்டு நான் வேலைபார்க்கும் ஊரிலிருந்து என் சொந்த ஊருக்குப்போக நேர்ந்தது. உண்மையான காரணம் ஆபீஸில் ஒரு முக்கியமான வருஷாந்திரப்புள்ளி விவரம் எடுத்து அனுப்பவேண்டும் என்பதுதான். இரவில் அந்தப்புள்ளிக்கணக்கை நினைத்துக்கொண்டால் எனக்குப் பயங்கரமாக இருக்கும். அந்த சமயம் பார்த்து லீவில் போய்விட்டால், எவனாவது மற்றவன் மாட்டிக்கொண்டு விழிப்பானல்லவா! இதைக் கூறி லீவு கேட்டால் எங்கள் மானேஜர் லீவு கொடுப்பாரா? தாத்தாவிற்கு உடம்பு "டேஞ்சர்" என்று என் நண்பனை விட்டு ஒரு தந்தி அடிக்கச்சொல்லி அதைக்காட்டி 15 நாள் லீவ் வாங்கினேன். ஊருக்குப்புறப்படுவதற்கு 10 மணிக்கு ரயில் என்றால், முதல்நாள் இரவே கெடியாரத்தை அரைமணி வேகமாகத் தள்ளிவைத்தேன். என் மனைவியிடம் அதுதான் சரியான மணி என்றும் சொன்னேன். இல்லாவிட்டால் அவள் தயார் செய்துகொண்டு வீட்டைப்பூட்டிக்கொண்டு புறப்பட்டு 10 மணி ரயிலைப் பிடிப்பது எப்படி?

"......அடுத்தாத்து அயிலாண்டப் பாட்டி தன் 7 வயது பேரனை இடுப்பில் வைத்துக்கொண்டு........."

ஸ்டேஷனுக்குப் போனதும், பாலுவிற்கு ஒரு அரை டிக்கட் வாங்குவதா, வேண்டாமா என்ற பிரச்னை வெகு பலம். பாலுவென்பது என்னுடைய $4\frac{1}{2}$ வயதுக் குழந்தைதான். இதில் பிரச்னை என்ன வேண்டியிருக்கிறது? 3-வயது ஆனால் 12-வயது வரை அரை டிக்கட் வாங்கவேண்டியதுதானே சட்டம்? இதில் என்ன சந்தேகம் என்று கேட்கலாம். எல்லாம் பணச்செட்டுக்குத்தான். அடுத்த வீட்டு அயிலாண்டப்பாட்டி தன் 7-வயதுப் பேரனைப் பிறந்தமேனிக்கு

இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டு ரயிலுக்கு டிக்கட் வாங்காமல் வெற்றி கரமாகப் பிரயாணம் செய்யும்பொழுது எங்கள் 4½வயது "நறுங்கல்" பாலுவிற்கு நான் எதற்காக அரை டிக்கட் வாங்க வேண்டுமென்பது என் கட்சி. இரண்டு டிக்கட்டுகள் மாத்திரம் வாங்கிக் கொண்டேன். இந்த அதிகப்பிரசங்கி பாலு ரயிலில்தானா அப்படி "லெக்சர்" அடிக்கவேண்டும்? டிக்கட் பரிசோதகரைக் கண்டதும் அவன் வாயை அடக்கினேன். இரண்டு டிக்கட்டுகளையும் டிக்கட் பரிசோதகர் வாங்கிப் பார்த்துவிட்டு "ஏன் ஸார்! குழந்தைக்கு என்ன வயது?" என்றார். நான் '2வருஷம் 11மாதம், 3நாள்' என்றேன். முறைத்துப்பார்த்துவிட்டுப்போய் விட்டார் அந்த உத்யோகஸ்தர், என்னைப்பிடித்த நல்ல காலம்தான்.

ரயிலில் எதிர் வீட்டில் உட்கார்ந்திருந்த ஒருவர் வெகு நேரம் என் கை மோதிரத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் பார்ப்பதை நான் கவனித்தால் வேறு பக்கம் திரும்பிவிடுவார். பிறகு நான் கவனிக்காத பொழுது மறுபடியும் மோதிரத்தைப் பார்ப்பார். திருவள்ளுவர் காமத்து பாலில் ஒரு குறளில் கூறியிருக்கிறாரே அதுபோல்தான் அந்த மோதிரம் நான் தம்மண்ண செட்டி கடையில் ரூபாய் 40--க்கு வாங்கிய ரெங்கூன் கமலம் பதித்த அரைப் பவுன் மோதிரம். திடீரென்று அந்த எதிர் ஸீட் ஆஸாமி "ஏன் ஸார் அந்த மோதிரம் வைரமா? என்றார். இவரிடம் "இல்லை அது ரங்கூன் கமலம் தான்" என்று கூறி என் மதிப்பைக்குறைத்துக்கொள்ள எனக்குச் சிறிதும் இஷ்டம் இல்லை. "வைரம்தான்" என்றேன் பளிச்சென்று.

"ஸத்யாய மிதபாஷிணும்" என்றார் மகாகவி காளிதாஸர். அதன் பிரகாரம் ஊர் போய்ச் சேரும் வரையில் பேச்சைக் குறைத்து விட்டேன். ஊர் போய்ச் சேர்ந்ததும் என் பந்துக்கள் வீட்டிற்குச் சென்றேன். இந்த பந்துக்கள் வீட்டிற்குப்போனால் இவர்கள் லேசில் விடுகிறார்களா? நாம் வாங்கும் சம்பளத்தைப்பற்றித் தான் இவர்களுக்கு முதல் கவலை. நம் செலவிற்குச்சம்பளம் போதாவிட்டால் இவர்கள் காலணாக் கூடக்கொடுக்கப்போவதில்லை, அல்லது நமக்குத்தான் ஏராளமாக வந்தாலும் நாமும் ஒரு பைசாக்கூட இவர்களுக்குக் கொடுக்கப்போவதில்லை. இந்த அழகில் கேள்விகள் மட்டும் வெகு கராறாக இருக்கும். "சம்பளம் எத்தனை ரூபாய்?" என்று ஒரு பந்து கேட்பான். இவ்வளவு என்று சொன்னால் அவன் அதோடு போகமாட்டான். 'என்ன கிரேடு'? என்று கேட்பான். சரியென்று கிரேடையும் சொன்னால் இது பழைய கிரேடா, புது கிரேடா? என்று கேட்பான்.

என் பாட்டிக்குத் தமக்கை ஒரு "குடு குடு" கிழம் இருக்கிறது. அதற்குச்சாப்பாடு போக்குவரத்து எல்லாம் இருந்த இடத்தில்தான். கண் தெரியாது, பல் இல்லை. என்னுடைய குரலைத் தெரிந்துகொண்டு குசலப் பிரச்னம் செய்ய ஆரம்பித்து விட்டாள் பாட்டி. முதல் கேள்வி "உனக்குஎத்தனை குழந்தைகள்?" இதற்கு ஒன்றும் பொய் சொல்லி சமாளிக்கவேண்டிய அவசியம் இல்லை. சொன்னாலும் சாயம் வெளுத்து விடும். அடுத்த கேள்வி "எனக்கு எத்தனை சம்பளம்?" இந்தச் சம்பளத்தைப்பற்றிக் கேட்கிறார்களே, நாம் சொல்லித்தான் வைப்போமே என்றால் நமக்கு வெளியில் சொல்லும்படியான அந்தஸ்து உள்ள சம்பளமா கொடுக்கிறார்கள்?

அந்த நாளிலாவது ரூபாய் 50 சம்பளம் என்று சொன்னால் கேட்டவர்கள் "பேஷ்" என்று திருப்தியடைந்துபோய் விடுவார்கள். இந்தக் காலத்தில் சம்பளத்தை எவ்வளவு உயர்த்திச் சொன்னாலும் "இவ்வளவுதானா!" என்று 'சூ' கொட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள். பாட்டி கேட்ட கேள்விக்கு நிறையச் சம்பளம் சொல்லவேண்டுமென்று எனக்கு ஆசை. ஆகையால் "210 ரூபாய்" என்றேன். அந்தப் பாட்டி சாதாரணப்பாட்டியல்ல என்று உடனே தெரிந்தது. "பஞ்சப்படியைச் சேர்த்தா, சேர்க்காமலா?" என்று ஒரு போடு போட்டாள் பாட்டி. சம்பளம், பஞ்சப்படி எல்லாவற்றையும் கூட்டி அத்துடன் ரூ. 20. சேர்த்தால்தான் நான் சொன்ன ரூ. 210 வரும் என்று எனக்கல்லவா தெரியும். "சம்பளம் மாத்திரம்தான் பாட்டி ரூ. 210. என்றேன். "அப்படியானால் பஞ்சப்படி ரூ. 40. வரும்" என்றாள் பாட்டி. "ஆம்" என்று கூறினால் பாட்டி திருப்தியடைந்து விடுவாள் என்று நினைத்தேன்." இந்த விலைவாசியில் இது 150 சாப்பாட்டுக்கே கணக்காய்த் தான் இருக்கும், கையில் ஒன்றும் மிஞ்சாது" என்றாள். இனி இங்கிருந்தால் ஆபத்து என்று மெல்ல நழுவிவிட்டேன்.

இதுபோலப் பொய்ப் பந்தல் போட்டுக்கொண்டு லீவைக் கழித்தேன். லீவில் போனால் குறித்த



கொஞ்சநாட்களுக்கு முன் பண்டித ஜவாஹர் ஸ்ரீநகர் போயிருந்தார். அங்கு காஷ்மீர் யுத்தத்தில் ஈடுபட்டுக் காயமடைந்த ஒரு வீரனை ஆஸ்பத்திரியில் சந்தித்துப் பேசினார். வீரனின் வேண்டுகோளின்படி நேரு அந்த நோயாளியின் நோட்டில் தமது பெயரைக் கையொப்பமிட்டுக் கொடுக்கிறார்.

தினத்தில் வந்து வேலையை ஒப்புக் கொள்ள முடிகிறதா? 15 நாள் லீவ் வாங்கினால் 14-வது நாள் தான் திரும்பி வேலைக்குப் போக வேண்டும் என்கிற பிரக்ஞை வருகிறது. இன்னம் 5 நாள் இருந்தால் தேவலை என்று தோன்றுகிறது. அதற்குத்தான் டாக்டர் என்று ஒருவர் இருக்கிறாரே, அவர் உதவியால் எனக்கு "இன்புளுவென்ஸா" என்றும், பிரயாணம் கூடாது என்றும் ஒரு ஸர்டிபிகேட் வாங்கியனுப்பி அதிகமாக 5 நாள் லீவ் வாங்க வேண்டியிருந்தது. அதுவும் முடிந்து கடைசியில் (பாலுவிற்கு அரை டிக்கட் வாங்காமல்) ஊர் வந்து சேர்ந்தேன்.

திரும்பி வந்தால் நண்பர்கள் லேசில் விடுகிறார்களா? ஒருவர் நான் புறப்படும் முன்பே காப்பிக் கொட்டை எங்காகிலும் கிடைத்தால் ஒரு வீசை வாங்கிவரச் சொல்லியிருந்தார். மற்றொருவர் 'டர்க்கி டவல்' இரண்டு வாங்கி வரச்சொல்லியிருந்தார். மற்றொருவர் தஞ்சாவூரிலிருந்து முந்திரிப் பருப்பு ஒரு வீசை வாங்கிவரச் சொல்லியிருந்தார். இதுபோல் பல பெயர்கள், பல சாமான்கள். ஒருவராவது பணம் கொடுக்கவில்லை. இவ்வளவு பேர்களும் வந்து மொய்த்துக்கொண்டால் இவர்களுக்கு நான் அரிச்சந்திர வேஷம் எப்படிப் போடுவது? காப்பிக்கொட்டையே கிடைக்கவில்லை என்றேன். டர்க்கி டவல் விற்கும் கடை நான்போன சமயம் பூட்டியிருந்தது என்று ஒருவருக்குச் சொன்னேன். தஞ்சாவூர்ஸ்டேஷனில் தூங்கிப்போய் விட்டு அடுத்த ஸ்டேஷனில் விழித்துக்கொண்டதாக மற்றொருவருக்குச்சொன்னேன். இந்த வகையில் பொய்கள் மொத்தம் ஏழு.

இப்படிப்பொய் மயமாக நடத்தும் வாழ்க்கையைப் "பொய்" என்று வேதாந்திகள் சொல்வது நியாயம்தானே. ஏன் நீங்களும் இதுமாதிரி பொய் சொல்வதில்லையா? இல்லையென்று பொய் சொல்லாதீர்கள்.

கல்லின் கர்வம்

கௌசி

அம்மா மாம்பழம் நறுக்கிக் கொண்டிருந்தாள். பாபுவும் ஜயாவும் மாம்பழக் கொட்டைக்காக சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

"அம்மா! எனக்குத்தான் மாம்பழக் கொட்டை வேணும்" என்றான் பாபு.

"இல்லை அம்மா. எனக்குத் தான் வேணும். அன்றைக்கும் அவனுக்குத்தான் கொடுத்தே" என்று சிணுங்கினாள் ஜயா.

"பாபு தான் சின்னவன். அதனால் அவனுக்குக் கொட்டை கொடுக்கிறேன். உனக்குத்தான் துண்டு கிடைத்ததே" என்றாள் அம்மா.

* * * *

பாபு மாம்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு கொட்டையை தோட்டத்தில் வீசி எறிந்தான். அது ஒரு பெரிய கல்லின் பக்கத்தில் போய் விழுந்தது. அந்தக் கல் பல வருஷங்களாக அங்கேயே கிடந்தது. அதற்கு ரொம்ப கர்வம் இருந்தது. கொட்டை அதன் பக்கம்விழுந்ததும் அது ஏளனச் சிரிப்புடன் "ஓஹோ! நீ என்னுடன் போட்டி போட வந்திருக்கிறாயோ?" என்றது.

மாம்பழக்கொட்டை பயத்துடன் "இல்லை.நான்போட்டி ஒன்றும் போட வரவில்லை. என்னை அந்தப் பையன்தான் இங்கு வீசி எறிந்தான்" என்றது.

"நான் பல வருஷங்களாக இங்கு இருக்கிறேன். என்னை யாராலும் அழிக்க முடியாது. நீயோ நாளைக்கே அழிந்து போகக் கூடியவன். அப்படியிருக்க, புத்தியில்லாமல் நீ என் பக்கத்தில் வந்தாயே" என்று கோபித்துக்கொண்டது.

மாம்பழக்கொட்டை பயத்தால் தலையை மண்ணிற்குள் மறைத்துக்கொண்டது.

* * * * *

இரண்டு மூன்று மழை பெய்தவுடன் அந்தக் கொட்டை முளைக்கத் தொடங்கியது. இரண்டு மூன்று மாவிலை வெளி வந்ததும் அதுவரை சுகமாகத தூங்கிக்கொண்டிருந்த கல் தலை நிமிர்ந்து பார்த்து ஆச்சரியமடைந்தது. பிறகு, அதே மாம்பழக்கொட்டைதான் இந்த ரூபத்தில் வந்திருக்கிறது என்று அறிந்ததும் அதற்குப் பொறாமை உண்டாயிற்று.

அந்தச் செடியைப் பார்த்து, "எலே!சில நாட்களுக்குமுன் நீ இங்கே கொட்டையாய் இருந்தவன் இல்லையா? என்னிடம் உள்ள பயத்தினால் இந்த ரூபத்தில் வெளி வந்திருக்கிறாயோ? நான் இங்கே இருக்கமாட்டேன் என்று நினைத்தாய். என்னை யாராலும் அசைக்க முடியாது என்று தெரியாதோ?" என்று கூறிவிட்டு சிரித்தது.

அப்பொழுது பாபுவும் ஜயாவும் விளையாடிக்கொண்டே அந்தக் கல்லில் வந்து உட்கார்ந்தார்கள். பாபு அந்தச் செடியைப் பார்த்து அதிசயத்துடன் "ஜயா! நான் அன்றைக்கு சாப்பிட்டு

விட்டு போட்டேனே. அந்தக் கொட்டை செடியாக வளர்ந்திருக்கிறது. அதனாலே இந்தமரம் என்னுடையது'' என்றான்.

ஜயா "இப்பொழுது, நம்மில் யார் இதற்கு முதலில் தண்ணீர் விடுகிறார்களோ அவர்களுக்குத்தான் இந்த மாஞ்செடி'' என்றாள்.

இருவரும் ஜலம் எடுத்துக்கொண்டு வர ஓடினார்கள். ஜயா ஓரே ஓட்டமாக ஓடினாள். அவசரமாக ஓடிவரும்பொழுது அந்தக் கல் தடுக்கி விழுந்தாள். அவள் போட்ட சத்தத்தில் தந்தையும், தாயும் ஓடி வந்தார்கள். தாய் ஜயாவை உள்ளே கூட்டிக் கொண்டு போனாள். அவள் தந்தை வேலைக்காரனிடம் "ராமு! நாளைக்கு இந்தக் கல்லை இங்கிருந்து மாற்றிவிடு. அடுத்த காம்பவுண்டில் வீடு கட்டப்போகிறார்கள். அவர்களிடம் கொடு. அவர்களுக்கு உபகாரமாக இருக்கும்'' என்றார்.

இதைக் கேட்ட மாஞ்செடி சந்தோஷத்தினால் அசைந்தது.

கல் தன்னுடைய நிலைமையை நினைத்துப் பார்த்தது; வீடு கட்டக்கொண்டு போனால் தன்னை உடைத்துவிடுவார்கள் என்று அறிந்ததும் அதற்கு அசாத்திய துக்கம் வந்தது. தன்னுடைய கர்வத்திற்காக வருந்தியது. உடனே செடியிடம் 'நண்பா! என்னை மன்னித்துவிடு. நான் உன்னை மிகவும் அவமதித்துவிட்டேன். ஆனால் நீ ஒரு வார்த்தை கூடப் பேசாமல் எவ்வளவு பொறுமையாக இருந்தாய். எனக்கு அழிவு கிடையாது என்று நினைத்தேன். இப்பொழுது என்னுடைய கர்வம் தொலைந்தது, இனி உன்னை தொந்தரவு செய்யமாட்டேன். நீ கிளையும் பூவுமாக பல காலம் வாழ்ந்திருக்கவேண்டும்'' என்று வாழ்த்தியது.

இப்பொழுது மாஞ்செடி கல்லின் பிரிவுக்காக வருந்தியது.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4.

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்—''சுதேசமித்திரன்'' ஆபீஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்.

கட்டுரையாளருக்கு

'சுதேசமித்திரன்'' வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். தறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ தறிப்பிடாமலிருக்க வேண்டும்.

— ஆசிரியர்

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

6.

அதே பௌர்ணமி

மதுரைமா நகரத்தை அக்காலத் தமிழகத்தின் இதயப் பிரதேசம் என்று சொன்னால், இதயத்தின் இதயம் என்று சொல்லவேண்டும். அரசர் பிரானுடைய அரண்மனை, கொலு மண்டபம், அந்தப்புரம், சிங்காரப் பூங்காவனம் முதலியவை அமைந்திருந்த அந்த நகரப் பிரதேசத்தை. சிங்காரப் பூங்காவனம் அரண்மனைக்கே ஒரு சிங்காரத் திலகம்போல் இருந்தது. இது ஒரு பூந்தோட்டம்மட்டுமன்று; இயற்கையழகுகள் நிறைந்த ஒரு காடுபோலவும் தோன்றியது.

இப் பூங்காவனத்தினிடையே தாமரைத் தடாகங்களும், மலைகள்-மலைத் தொடர்கள்போல் அமைக்கப்பெற்ற செய்குன்றுகளும், ஆறுகள் உபநதிகள் கிளையாறுகள் போல் அமைந்த நீரோடைகளும் காணப்பட்டன. செய்குன்றங்களில் செயற்கை—அருவிகளும், இடையிடையே புல்லுப்புரைகளும், பூமரங்களுக்கும் பூங்கொடிகளுக்குமிடையே கொடி வீடுகளும்.பரண்களும், ஊஞ்சல்களும் அமைக்கப்பெற்றிருந்தன. ஒரு பிரம்மாண்டமான ஆலமரம் தன் கிளைகளுடனும், விழுதுகளுடனும் ஓர் ஆயிரக்கால் மண்டபம்போல் ஒழுங்கு செய்யப்பெற்றுக் காட்சியளித்தது. வேறு சில மரங்களும் இயற்கை-மண்டபங்கள்போல் அலங்கரிக்கப்பெற்றிருந்தன. வசதியான இடங்களிலெல்லாம் பீடங்கள் ஆசனங்கள் பொன்னாலும் வெள்ளியாலும் சலவைக் கற்களாலும் விசேஷ வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பெற்றிருந்தன. சுருங்கச் சொன்னால், 'பரந்த உலகத்தின் சிதறிய அழகுகளையெல்லாம் தொகுத்துச் செய்த ஒரு சிங்காரக் குட்டி உலகம் இது'! என்று சொல்லத்தோன்றும்.

பூசுந்தரி தன் உறைவிடமான பூலோக சௌந்தரியங்கள் ஒருங்கே நிறைந்திருந்த சிங்கார பூங்காவனத்தையே அந்தப்புரமாகவும், அந்தப்புரத்தைச் சில சமயங்களில்மட்டும் தங்குமிடமாகவும் உபயோகித்து வந்தாள். அப்பூங்காவனத்திலும், பல்வேறு பூக்கள் நிறைந்திருந்த பகுதிகளையும், வெண்தாமரை செந்தாமரைப் பூக்கள் நிறைந்த தடாகக் கரைகளும் பெரும்பாலும் தன் இருப்பிடமாகக்கொண்டு பொழுது போக்குவாள்; அல்லது அந்த இடங்களில் இராஜ்ய காரியங்களை அரசனுடனோ, தனியாகவோ கவனித்து வருவாள்.

அத்தகைய இடம் ஒன்றில் ஒரு நாள் சூரியாஸ்தமன சமயத்தில் பூசுந்தரி தனியாகப் பந்து விளையாடிக்கொண்டிருந்தாள். முன்னும் பின்னுமாக, அங்கும் இங்குமாக ஒரு பூங்கொடி ஆடி ஓடி விளையாடுவதுபோலத் தோன்றுகிறது ஒரு கணம். வேறொரு கணம், தோகை விரித்து மயில் நடனம் செய்வதுபோலத் தோன்றுகிறது,—கூந்தல் சரியச் சித்திரப்பொற் பட்டாடை காற்றிலே பறக்கப் பந்தாடும்போது ஒரு கணம் அன்னம் நடப்பதுபோலவும், ஒரு கணம் சித்திரமே நடை பயில்வதுபோலவும், ஒரு கணம் அந்தச் சிங்கார வனத்தின் அதிதேவதையான ஏதோ ஒரு மோகினியே இறங்கி நடப்பதுபோலவும் நடந்து பந்து விளையாடுகிறாள்.

இவள் குழைந்து குழைந்து கைவளைகளும் பாதசரங்களும் ஒலிக்கப் பந்தாடுகிறாள். கை வளைகள் ஜயகோஷம் செய்வதுபோல் குலுங்க, பாதச் சிலம்புகள் ஜயகோஷத்தினிடையே ஒரு சோக கீதம் எழுப்புவதுபோலப் புலம்பு கின்றன.

பந்து போகும் போக்கையெல்லாம் விழி புரண்டு புரண்டு பார்க்கும் அந்த அழகைத் தான் என்னென்பது? விழிதான் முந்துகிறதா? கைமுந்துகிறதா? மனம்தான் முந்துகிறதா?

இந்தப் பந்தாட்டத்தைத்தானே தன்னந்தனி யாக அனுபவிப்பதாய் எண்ணம் பூந்தரிக்கு. வேறொரு உள்ளமும் இந்தச் சௌந்தரியத்தை யும், ஆனந்தத்தையும் பருகிக்கொண்டிருக்கிறது என்பதை, ஆட்டத்திலேயே கண்ணுங்கருத்துமா யிருந்த பூசுந்தரி அறிந்து கொள்ளவில்லை.

நடந்தும் விரைந்தும் இடசாரி, வலசாரி வந் தும், மார்பில் அணிந்த மணிவடங்களும் காதில் அணிந்த குண்டலங்களும் ஊஞ்சலாடவும் பந்து விளையாடிக்கொண்டிருந்த பூசுந்தரிமீது அஸ்தமன சூரியனின் மஞ்சள்-வெயில் விழும் போது, 'ஆஹா என்ன காட்சி, பொன்னொளி வந்து தாவிய மின்னொளிபோலே!' என்று அதிசயித்தது, பார்த்துக்கொண்டிருந்த உருவம் 'எவ்வளவோகாலம் பழகியிருக்கும் எனக்கும் இந்த அதிசயமா? இதுதான் சௌந்தரியம்!' என்று நினைத்து,

இந்திரையோ இவள்?
சுந்தரியோ? தெய்வ
ரம்பையோ? மோகினியோ?
மனம்—முந்தியதோ?
விழி முந்தியதோ?
கரம் முந்தியதோ?

என்று வாய்விட்டுப் பாடியபோதுதான், பூங் கொடிகளுக்கிடையே மறைந்திருந்த அவ்வுருவம் நின்று கொண்டிருந்த திசையை நோக்கினாள் பூசுந்தரி.

பளிச்சென்று பந்தாட்டத்தை நிறுத்தி விட்டு ஓடிப்போய், பூவோடு பூவாகத் தோன் றிய அம் முகத்தைப்பற்றிக் கன்னத்திலே செல்லமாகக் கிள்ளினாள். கிள்ளிக்கொண்டே 'என்ன? ஆனந்தம்!' என்றாள். என்ன ஆனந்தம்!—என்றுதான் நானும் மெய்ம்மறந் திருக்கிறேன்' என்றாள் ஆனந்தவல்லி.

'நீ வந்ததை நான் கவனிக்கவே இல்லையே!'

'ஆம், இது மகா மாட்சிமை தங்கிய மகா ராணியின் சிறப்பு! விளையாட்டானாலும், இராஜ்யகாரியமானாலும் இப்படி ஒருமை யுள்ளத்துடன் ஈடுபடுகிறீர்கள். உள்ளத்தின் சக்திகளைச் சிதறவிடாமல் ஒருமுகப்படுத்துவ தால், தங்களுக்கு உண்மையொளி உதயமாகி றது உள்ளொளியாக. இது உங்கள் மேதை

இதனால்தானே அரசர், அமைச்சர் முதலான வர்களால் தீராத ஐயப்பாடுகளையும் தங்களை நாடி வந்து தீர்த்துக்கொண்டு போகிறார்!'

'சரி, சரி; போதும் போதும் உன் முகஸ்துதி! இனி மந்திரி சபையிலேயே நான் உத்தியோகம் பெறலாமென்று தோன்றுகிறது. இங்கே இப்படிப் பொழுது போக்குவதைவிட, இராஜ் யத்திற்கு உபயோகமாயிருக்கலாம். ஆனால் ஒரு சந்தேகம்: அரசரின் சந்தேகத்தையும் நான் தீர்க்கிறேன் என்கிறாயே; என் சந்தேகமே எனக்கு இன்னும் தீர்ந்தபாடில்லையே!'

'ஓஹோ, அந்தச் சந்தேகமா? நகரிசோதனை யில் மன்னர் பிட்சுவை மறுபடியும் சந்தித்துத் தான் தம் சந்தேகங்களைப் போக்கிக்கொண்டா ரே! அந்த விவரங்களை அறிந்துகொண்ட பின்பும் பிட்சு, பிட்சு இல்லை என்று நினைக்கி றீர்கள்! இது என்ன நியாயமோ?'

'இப்போதுதானே நீ எனக்கு ஏதோ உள் ளொளியாக உண்மை உதயமாகிறதென்று சொன்னாய். அந்தப் பௌத்தபிட்சுவின் முகம் என் உள்ளொளிக்கு எதிரே வரும்போது அவ் வளவு பிரகாசமாக, உண்மையாகத் தோன்ற வில்லை.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டே ஒரு தாம ரைத் தடாகக் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அக்குளத்தைச் சுற்றிப் பூமரங்கள் வரிசை வரி சையாக வளர்ந்திருந்தன. அம்மரங்களின் கரு நிறம் பொருந்திய சாயைகள், அஸ்தமன சூரி யனது பொன்னிறக் கிரணங்களுடன் தண்ணீர் மீது படிந்தன. ஒரு படித் துறைக்கு அருகே இருந்த சில மரங்களின் கிளைகள் நீண்டு தண் ணீர்மீது பரந்து கவிந்திருந்தன. அம்மரங்கள் மீது சில கொடிகளும் படர்ந்திருந்தன. அத் துறை ராணி உகந்து நீராடும் துறை. தனியாக வோ, உகந்த தோழிகளுடனோ, மன்னருடனோ அத்துறையில் பூசுந்தரி இறங்கி நீந்தி விளை யாடுவதுண்டு.

இப்போது பூசுந்தரியும், ஆனந்தவல்லியும் அப்படித் துறையிலிருந்துகொண்டு, தடாகத் தண்ணீருடன் அஸ்தமனக்கதிர்கள் படிந்து விளையாடுவதைப் பார்த்தார்கள். 'அங்கே படிந் திருந்த அழகிய கிரணங்களெல்லாம் இக்கரிய நீரில் கரைந்து கலந்துவிட்டன. இனி இருட்டி விடும். இப்படித்தான் நம்முடைய அழகிய ஆலோசனைகளும், வாழ்க்கையின் எதார்த்த நிலைகளுடன் கரைந்து போகின்றன! இப்படித் தான் அழகான வாழ்க்கைகளும் இருண்டு போகின்றன! என்னுடைய வாழ்க்கை மட்டும்



இந்த விதிக்கு விலக்காகுமா?' என்றாள் பூசுந்தரி.

அதற்கு ஆனந்தவல்லி, 'ஏனம்மா இப்படி ஆலோசிக்கிறீர்கள்? இன்று பௌர்ணமி—ஒரு மாதத்திற்கு முன் நம் மன்னர்பிரான் வெற்றியுடன் திரும்பிவந்தாரே, அந்தப் பௌர்ணமி தினம். இந்த ஒதுக்கிடத்தில் இருப்பதால்தான் பூர்ணசந்திரன் தெரியவில்லை. கரைக்குப் போய்க் கிழக்கு நோக்கிப் பூர்ணசந்திரனைத் தரிசிப்போம்' என்று பதில் சொல்லிவிட்டு, ராணியைக் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டு வந்தாள்.

கீழ்வானத்திலே அமிர்த கலசம் தோன்றியது போல் பூர்ணசந்திரன் எழுந்து வானவீதியில் ஏறிக்கொண்டிருந்தது. ஆனால் ராணியின் மனக்கண் பௌத்த பிட்சுவின் முகத்தைத்தான் அந்தச் சந்திரபிம்பத்திலும் பார்க்கத் தொடங்கியது.

'சந்திரிகை போன்ற குளிர்ந்த முகத்திலும் தீய உள்ளம் குடிகொண்டிருக்கலாமே. பூர்ண வெற்றியுடன் மன்னர் வந்து சேர்ந்த அந்தப் பௌர்ணமியில் அபசகுனம்போல் பிட்சுவும் வந்து சேர்ந்தாரே! விழாக்கொண்டாட்டத்தையே கொன்றுவிட்டார், குளிர்ந்து கொல்லும் விஷம்போலே! விஷமாக வந்தாரா? விஷமஞ் செய்ய வந்தாரா? அல்லது உண்மையாகவே பிட்சுதானா? எவ்வளவு ஒருமையுள்ளத்துடன் இந்தப் பிரச்னையை நான் அலசிப் பார்த்தாலும் என் ஐயம் தீரவில்லையே!' என்றாள் பூசுந்தரி.

அதற்கு ஆனந்தவல்லி, 'அம்மா! வெண்ணிலவின் அந்த ஆசைமுகத்தைப் பார், அது பவனி வரும் வான வீதியைப்பார். பார்க்கப்பார்க்க, தீராக் கவலையும் தீர்ந்து போகுமே! அந்தப் பௌர்ணமி போல் மழைக் குறியோ, புயல்-குறியோ இன்று காணப்படாமல் வானம் மிகவும் தெளிவாக இருக்கிறது. தெள்ளத் தெளிந்த ஞானிகளின் உள்ளம் போலே பௌத்த மதக் கொள்கையும் ஸாராம்சத்தில் சந்திரிகைபோல் குளிர்ந்த நல்லருளைத் தானே வற்புறுத்துகிறது? அந்தத் துறவியின் அவைதிகமான கொள்கைகளும், அம்மதத்தின் முரண்பாடுகளும் நமக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அதற்காக அவர் ஏதோ மதவிஷயமாகவோ, அரசியல் விஷயமாகவோ சூழ்ச்சி செய்கிறார் என்று எண்ணிவிடலாமா?' என்றாள்.

'அவர் சூழ்ச்சி செய்கிறார் என்பதற்கு இது வரை தக்க ஆதாரமில்லைதான். எனினும் என் உள்ளம் அந்தப் பிரச்னையைக் குறித்துச் சிந்தனை செய்யாமலிருக்க முடியவில்லை.'

'இப்படியெல்லாம் மதுரைமா நகரத்தின் மகாராணி மாட்சிமை தங்கிய பூசுந்தரி தேவி

யார் கவலைப்படுகிறார் என்றால், யார்தான் நம்புவார்?'

எத்தனையோ சந்தர்ப்பங்களில் அனுதாபமும், ஆறுதலும் அளித்து வந்திருக்கும் குரலில் ஆனந்தவல்லி அப்படிச் சொன்னதும், பூசுந்தரி அந்தத் தோழியை முகம் நோக்கி, 'இப்போது எனக்கென்னடி கவலை? சிந்தை செய்தாலும் அது கவலை தானா?' என்றாள்.

'சிந்தை பொல்லாததம்மா, —மிகவும் பொல்லாதது "சிதை பிணத்தை எரிக்கிறதென்றால் சிந்தை உயிரோடு எரித்து விடுகிறது!" என்று சாதாரணமாய்ச் சொல்லுகிறார்களே, நீங்கள் அறியாததா?'

'சிந்தையென்று நான் இப்போது சொன்னது அந்த எரிக்கும் சிந்தை அல்ல. நான் சிந்தனை செய்துகொண்டிருந்தேன்: ஆம், பௌத்த பிட்சுவைக் குறித்துச் சிந்தனை செய்துகொண்டிருந்தேன். இருண்ட பிரச்னைகளுக்கிடையே ஒளி காட்டுகிறது சிந்தனை; இல்லையா? சிந்தனை எரிக்காது; ஆனால் ஒளி காட்டும் தீபம்!'

'என்ன? மகாராணி! மந்திரியாவதாகச் சொன்னீர்கள்; இப்போது மனோ தத்துவ சாஸ்திரியாகப் பார்க்கிறீர்களா? ஆனால் திரும்பத் திரும்பச் சிந்தனைகளுக்கிடையே மனத்தைச் சுழலவிடுவதும், சூட்சும யந்திரமாகிய மனசைக் கெடுத்துவிடுவதுதானே! இப்படிச் சிந்தனையே கவலையும் ஆகிறது.'

'இப்படி நீ செய்யும் மனோ தத்துவ விசாரத்தால் என் கவலையைப் போக்கிவிடலாமா?'

'விசாரத்தால் கவலையைப் போக்குவது எளிதன்று. ஏதாவது வேலை செய்து கவலையைப் போக்கிக்கொள்ளலாம்.'

'என் சிந்தை சென்ற ஒரு மாதமாகச் சிந்தனைகளுக்கிடையேதான் சுழன்றுகொண்டிருக்கிறது. வேறு எந்த வேலையிலும் ஈடுபடாதே!'

'தாங்கள் பந்து விளையாடிக்கொண்டிருந்தீர்களே. அப்போது வேறு சிந்தனை இருந்ததாகத் தெரியவில்லையே. இருந்திருந்தால் ஆட்டம் அவ்வளவு சுவாரஸ்யமாக இருந்திருக்குமா?

இப்படி அனந்தவல்லி சொன்னதும், ராணி பூசுந்தரி 'இனி நான் இன்றிரவு பந்தாடப் போவதில்லை. உன்னுடன் இவ்வளவு பேச்சுக் கொடுத்த பின்பு, பௌத்தபிட்சுவும், புரோகிதர் செல்வநம்பியும், மந்திரி மாறங்காரியும், தளபதி வில்லியும், இவர்களுடன் கைகோத்து மன்னர் பெருமானும் பவனி வந்த வண்ணமாயிருக்கிறார்கள் என் மன வீதியில்! இந்தச் சிந்தனையாகிய சங்கிலித்தொடரிலிருந்து கொஞ்ச நேரமாவது தப்பி விடுதலை பெறவேண்டும். அப்படியானால்தான் அரசர் வந்ததும், தெளிந்த புத்தியுடன் நான் அவருக்கு ஏதாவது இன்று ஆலோசனை சொல்லக்கூடும். அவர் தம்முடைய பெரிய மனநோய்க்குப் பெரிய வைத்தியம் தேடுகிறார். நானோ சாமானியத் தலைவலிக்கு மருந்து கேட்பதுபோல், சொற்ப நேரம் என் சிந்தனைகளை மறந்திருக்க ஒரு சிறு மருந்து உன்னிடம் இருக்கிறதா என்று தான் கேட்கிறேன்' என்று ஏதோ ஒரு குட்டிப் பிரசங்கம் செய்வதுபோல் பேசிவிட்டாள்.

அந்தப் பேச்சிலேயே ராணியின் மனக்களைப்பு வெளிப்பட்டதுபோலவும் தோன்றியது ஆனந்தவல்லிக்கு. 'நான் பாடலாமா? அல்லது அமுதத்தை வரவழைத்து ஆடச்சொல்லலாமா?'

'ஆடலும் வேண்டாம், பாடலும் வேண்டாம் இப்போது. இவற்றைக்காட்டிலும் லேசாக மருந்து இல்லையா உன்னிடம்?'

'மகாராணியே! தாங்கள் எத்தனையோ மனநோய்களுக்கு எப்பேர்ப்பட்ட வைத்தியங்களெல்லாம் செய்துபார்த்திருக்கிறீர்களே! அதனால்தான் அரசரும், அரசாங்கமும் இவ்வளவு ஆரோக்கியமாய் இருக்கிறார்கள்!'

'என் வைத்தியம் எனக்குப் பலிக்காதம்மா! வைத்தியர்களுக்கு வியாதி வந்தால் தாங்களே வைத்யம் செய்துகொள்ளுகிறார்களா? நமது அரண்மனை வைத்தியர் வைத்திய நிபுணராக இருந்தும் தமக்கு ஏற்படும் சாமானிய நோய்க்குக் கூட வேறொரு வைத்தியரைத் தானே அழைக்கிறார்கள்?'

ஆனந்தவல்லி பளிச்சென்று தன் வைத்தியம் ஆரம்பித்துவிட்டதென்று சொல்லிக்கொண்டே ராணியம்மாளின் கையைப் பற்றிக்கொண்டு, சிறிது தூரத்தில் இருந்த கொன்றை மரங்களுக்கு அருகே அழைத்துக்கொண்டு போனாள். அந்தப் பொன்னிறப் பூக்கள் சரஞ்சரமாய்ப் பூத்துத் தொங்கிய அழகை மகாராணிக்குக் காட்டினாள். அந்த முழு வெண்ணிலவிலே அந்த மங்களப் பொன் மஞ்சள் எவ்வளவு வசீகரமாகத் தோன்றியது!

பிறகு அவர்கள் கைகோத்தவண்ணம் கொத்துக் கொத்தாயிருந்த பொன்னரளிப் பூக்களையும் பார்த்தார்கள். பவள மல்லிகைப் பூக்களையும், இரத்தச் சிவப்பான கலியாணமுருங்கை மலர்களையும், வேறு பூக்களையும் உற்று நோக்கியவண்ணம், அல்லிமலர்கள் காடாகப் பூத்திருந்த ஒரு தடாகத்தின் கரையிலே வந்து நின்றார்கள்.

'பூக்களைப் பார்த்ததில் மனத்திற்குக் கொஞ்சம் ஆறுதலாகத்தான் இருக்கிறது. உன் வைத்

தியம் பலனளிக்க ஆரம்பித்துவிட்டது' என்று ஒப்புக்கொண்டாள் பூசுந்தரி.

அப்போது ஆனந்தவல்லி ராணியை நோக்கி, 'இன்னும் சிகிச்சை பூர்த்தியாகவில்லை. நீங்கள் கொஞ்ச நேரம் இந்தக் கரையிலிருந்து அந்த அல்லிப் பூக்களைப் பார்த்துக்கொண்டிருங்கள். நான் இரண்டு நிமிஷங்களில் அந்தப் புல்லுப் புரைக்குப் போய்த் திரும்புகிறேன்' என்று சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடினாள்.

பூர்ண சந்திரிகையில் ஏதோ ஒரு குட்டிப் பாற்கடல்போலத் தோன்றிய அக்குளத்தையும், அக்காட்சியையும் பூந்தென்றலையும் தாங்களும் ரஸித்துத் தலையாட்டுவதுபோல் காணப்பட்ட அல்லி மலர்களையும் ராணி பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனந்தவல்லி ஒரு சிறு பொற்குடத்தும், கொஞ்சம் பெரிய ஒரு வெள்ளிக் குடத்துடனும் திரும்பி வந்தாள். ராணி உத்ஸாகமாய் ஒரு குடத்தை தன்னிடம் கொடுக்கும்படி கையை நீட்டினாள். ஆனந்தவல்லி பொற்குடத்தைராணியிடம் கொடுத்துவிட்டுத் தான் அந்தப் படித்துறையில் இறங்கி வெள்ளிக்குடத்தில் நீர் மொண்டு கொண்டாள். ராணியும் அப்படியே தன் குடத்தில் தண்ணீர் மொண்டு கரையேறினாள். பிறகு இருவரும் பல்வேறு பூஞ்செடிகளுக்கும் தண்ணீர் ஊற்றினார்கள். இந்தக் காரியம், ஆனந்தவல்லி எதிர்பார்த்த படியே அரசியின் உள்ளத்திற்கு ஆறுதல் அளித்தது.

பிறகு, ராணி, 'குடத்தை வைத்துவிட்டு அந்தப்புரத்து பளிங்கறைக்குள் போய்ச் [...] நேரம் பேசிக்கொண்டிருக்கலாமே' என்[...] அப்படியே இருவரும் குறுக்கு வழியாகப் [...] அந்த அறைக்குள் பிரவேசித்தார்கள். 'அ[...] அங்கே வருவார் என்று ராணி எதிர்பார்த்த[...]

பூசுந்தரி அங்கே கிடந்த தந்தக் கட்டி[...] அமர்ந்தாள். ஆனந்தவல்லி அவள் காலடிய[...] இரத்தின கம்பளம் விரித்திருந்த தரையி[...] உட்கார்ந்து அரசியின் முகத்தை உற்று நோக்கியவண்ணம் இருந்தாள். அந்தப் பளிங்கறையில் பொன் விளக்குகளும் மணி விளக்குகளும் இரவைப் பகலாக்கிவிட்டதுபோல் எரிந்துகொண்டிருந்தன.

ராணி கவலைப்படாமல் ஆனந்தமாய் இருப்பதற்காக ஆனந்தவல்லி தன் உயிரையே கொடுக்கக்கூடிய அவ்வளவு பக்திவிசுவாசம் பூண்டவள். ராணி தன் பல தோழிகளிடத்திலும் உல்லாஸமாகவும், அபேதமாகவும் பழகுவதுண்டு. சில தோழிகளிடம் தன் சொந்தக் காரியங்களைத் தாராளமாக வெளியிட்டு உரையாடுவதும் உண்டு. ஆனால் இந்த ஒரு தோழியிடம்தான் எந்தஇரகசியத்தையும்—சொந்தக் காரியமானாலும் சரி, இராஜ்யகாரியமானாலும் சரி— ஒளியாது வெளியிட்டு விவகரிப்பாள்.

அரசி சிறிது நேரம் ஒன்றும் பேசாமலே மறுபடியும் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு தோழியை நோக்கி, 'ஆனந்தம்! அரசருக்கு இப்போது வயது 50' என்றாள்.

...குத் தோழி, 'தங்களுக்கு வயது ... என்பதும் எனக்குத் தெரிந்ததுதான். ... இந்த வயதுக் கணக்குகளை ...ள் இருவரும் கவனிப்பதே இல்லையே. ... முதல் நம் ஊரில் உங்களைச் சந்தித்துக் ...வித்த அதே காதலராகத்தான் இன்றும் ...க்கிறுர்! அப்போது கன்னிமாடத்தில் கண் ...ற்ற அதே காதலி தான் தாங்கள் இன்றும் ...வருக்கு!' என்ருள்.

இது கேட்ட பூசுந்தரி சிரித்தாள். இவளுடைய சிரிப்பை மதுரையில் மட்டுமல்ல, உலகத்திலேயே மிகவும் மதுரமான சிரிப்பு என்று மன்னன் கூறுவதுண்டு. அந்த ரஸிகத்தன்மையை ஆனந்தவல்லியும் பாராட்டி, ஆம் ஆனந்தமான காலைவேளையில் உதயராகத்திலே இளஞ்சூரியனை வரவேற்கும் ஓர் இன்னிசைப் பறவையின் பாட்டைப்போல் இருக்கிறது ராணியின் சிரிப்பு?' என்று தன்னுடைய அபிப்பிராயத்தையும் அரசன் காதில் விழும்படி வெளியிட்டிருக்கிருள். ஆனல் அந்தச் சிரிப்பு இன்று அவ்வளவு இயற்கையாகவும் இல்லை, இனிமையாகவும் இல்லை.

பிறகு ராணி ஆனந்தவல்லியை நோக்கி, அடி பைத்தியமே! அந்தக் காதல்-பைத்தியத்தை இப்போது நான் நினைக்கவில்லை. அவருக்கு வயது அதிகரித்து வருகிறதென்ற நினைப்பே எனக்கு எப்போதும் கிடையாது. ஒரு மாதம் வரையில் ஜாதகக்குறிப்பிலிருந்து வயதைத் தெரிந்துகொள்ளவும் முயன்றதில்லை. இந்தக் கடைசிப்போர் ஏற்படும்வரை, உணர்ச்சியிலும் தோற்றத்திலும்கூட யௌவனக்காதலர்தான் அவர்! ஆனல் இப்போது ஒரு மாதமாக ஏதோ ஒரு மாறுதல் ஏற்பட்டு வருவதுபோல உனக்குத்தெரியவில்லையா?' என்று கேட்டாள்.

அதற்கு ஆனந்தவல்லி, 'அது எனக்கும் தெரியும். அந்த மாறுதலுக்குக் காரணம் பௌத்த பிட்சுதான் என்று நினைக்கிறீர்களா?' என்று வேருெரு கேள்வி கேட்டாள்.

'பிட்சுதான் காரணம் என்று நான் நினைக்கவில்லை; பிட்சு ஒரு முக்கிய காரணம் என்பது எனக்குத் தெரியும். எனக்கு என்னவோ அந்த துறவு-மார்க்கம் பிடிக்கிறதே இல்லை, வாழ்க்கையில் சோர்வும் தோல்வியும் ஏற்பட்டவர்களுக்குத்தான் அந்த வாழ்க்கைத் தத்துவம் சரிப்படும் என்பது என் நினைப்பு. ஆனல் அரசருக்கு அந்தக் கொள்கைகளில் இப்போது வர வர அபிமானம் அதிகரித்து வருகிறதோ என்று அஞ்சுகிறேன்.'

'சிறந்த போர் வீரரான அரசர் பௌத்தராகி விடுவாரென்று என்னுல் எண்ண முடியவில்லையே!'

'இனி, போருக்குத்தான் எந்த எதிரி தயாராக இருக்கிறுன்? மேலும் அஹிம்ஸா தர்ம வீரர் அதிவீரர் என்றும், வீரர்களுக்கெல்லாம் மேலான வீரர் என்றும் அரசர் சொல்ல ஆரம்பித்துவிட்டார்.'

'நம் மன்னரைப்போன்ற வீரர் வீரத்தைத் துறப்பதென்ருல், மீன் வேண்டுமென்றே தண்ணீரைத் துறந்துபோவதுபோலத்தான். ஒரு வேளை அப்படி அவர் செய்யப்போகிருர் என்று நான் நம்பியபோதிலும், தங்கள் காதலையும் அரசரால் துறந்துவிட முடியுமென்று நான் நம்பவேமாட்டேன்!'

அது கேட்ட பூசுந்தரி புன்னகை புரிந்து, 'அதைக்குறித்துச் சிறிதும் எனக்கு அச்சமாவது, கவலையாவது இல்லையம்மா! ஆனல் 50 வயது வரை பெயரளவில் சிவபக்தராக இருந்து இம்மை தவிர மறுமையைக் குறித்துக் கவலைப்படாமலே இருந்துவிட்டவர், அந்தப் பௌத்த பிட்சுவை அன்று கண்டு சம்பாஷித்ததுமுதல் ஏதோ மனச்சோர்வு கொண்டிருக்கிறுர் என்பது நிச்சயம். ஆனல் மந்திரி மாறங்காரி இருக்கிறுர்; புரோகிதர் செல்வநம்பியும் வந்திருக்கிறுர்; தளபதி வில்லியும் நல்ல பக்தர். இவர்கள் மன்னரை அன்னிய மதத்தில் சேரவிட மாட்டார்கள் என்பது என் நம்பிக்கை' என்ருள்.

அதற்குத் தோழி, 'அவர்களெல்லாம் தோல்வியுற்றுலும்கூட உங்கள் காதல் வெற்றி பெறும் என்பது குறித்து எனக்குச் சந்தேகமே கிடையாது' என்ருள்.

பிறகு பூசுந்தரி, அதிருக்கட்டும். அந்தப் பிட்சுவின் முகம் என்னவோ எனக்குப் பிடிக்கவே இல்லை. இதயத்திலுள்ள சாந்தியைப் பிரதிபலிப்பதுபோல் முகம் அமைதியாகத்தான் இருக்கிறது. எனினும் அந்த அமைதிக்குள்ளே, சாம்பலுக்குள் நெருப்பு இருப்பதுபோல் ஏதோ ஒரு பொல்லாத சூழ்ச்சி கிடக்கிறதோ?—என்று என் உள்ளம் அஞ்சியதுண்டு. 'அது மதச் சூழ்ச்சியோ, அரசியல்-சூழ்ச்சியோ?'' என்று கூட என் இதயம் பதறியதுண்டு. அரசருக்கு இப்போது அவர்மீது அவ்வளவாகச் சந்தேகம் தோன்றவில்லை. எனக்குத்தான் அந்தச் சந்தேகங்களை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு ஆதாரம் என்ன கிடைத்துவிட்டது?' என்ருள்.

பூசுந்தரி இப்படி மறுபடியும் மனங்குழம்பிப் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், அந்தப் பளிங்கறை வாசலை மறைத்திருந்த திரையை விலக்கிக் கொண்டு, மன்னனேவந்துவிட்டான். ராணியும், தோழியும் எழுந்து நின்ருர்கள். ராணியும் மன்னனும் பேசிக்கொண்டே பூங்காவனத்திற்கு வந்தார்கள். ராணி சைகை செய்யத் தோழி பளிங்கறையில் காத்திருந்தாள்.

பூங்காவனத்தில் வெண்ணிலவை நன்றாக அனுபவிக்கும்படி அமைந்திருந்த இடைவெளிகளில் தந்தத்திலும், தங்கத்திலும் அருமையான வேலைப்பாடமைந்த ஆசனங்கள் கிடந்தன. அரசன் ஓர் ஆசனத்தில் அமர்ந்து அரசியுடன் உரையாட விரும்பினான். அரசி அவனுக்கெதிரே கிடந்த ஓர் ஆசனத்தில் தன் கையை வைத்துச் சாய்ந்தவண்ணம் நின்றுகொண்டே, அந்த நிலவொளியில் அரசனுடைய முகத்தை உற்று நோக்கினாள்.

அம்முகத்தில் முன்பிருந்த சோர்வு அவ்வளவாய்க் காணப்படவில்லை. அரசிக்கு அது அதிசயமாக இருந்தது. அவள் நிமிர்ந்து நின்று அரசனை முகம் நோக்கி, 'சிகிச்சை முடிந்துவிட்டதா? வைத்தியர் குணப்படுத்திவிட்டாரா? என்று கேட்டாள்.

சில தினங்களாக அரசன் அரசியைச் சந்திக்கவே இல்லை. செல்வநம்பியுடனும், மந்திரியுடனும் தளபதி வில்லியுடனும் அடிக்கடி ஆலோசனைகள் நடத்திக்கொண்டிருந்தான். இடையே ஒருநாள் மன்னனும் மந்திரியும் தளபதியும் இராஜ்ய காரியமாகச் சேதுவுக்குப் போயிருந்தார்கள். அங்கே கிடைத்த அதிசய அனுபவங்களைக் குறித்தும், தாங்கள் செய்த ஆலோசனைகளைக்குறித்தும் அரசியுடன் விவகரித்துத்தான் முடிவான தீர்மானம் செய்ய விரும்பினான் அரசன்.

அரசி கேட்ட கேள்விக்கு அரசன், உனக்குத் தெரியாமலா சிகிச்சை நடந்துவிட்டது? உத்தேசித்த வைத்தியம் சித்திக்குமா என்ற சந்தேகம் கூட இன்னும் தீர்ந்தபாடில்லையே!' என்று பதில் சொன்னான்.

பதில் சொல்லிவிட்டு அரசியின் முகத்தை அந்த நிலவொளியில் நிமிர்ந்து நோக்கினான். வானமண்டலத்திலிருந்து நிலவுக்கடலை நீந்திய வண்ணம் அப்போதுதான் வந்து கரையேறிய ஒரு தெய்வப்பெண் போலத் தோன்றினாள் அவள். 'இவளுடைய காதல்—வைத்தியமே போதாதா! என்றுகூடத் தோன்றியது அரசனுக்கு ஒரு கணம். அவளோ இப்போது தானும் ஒரு மந்திரிபோலவே அரசனுடன் ஆலோசனை செய்ய விரும்பினாள்.

'ஆரம்ப ஆலோசனைகளையெல்லாம் மந்திரி புரோகிதர் முதலானவர்களுடன் தாங்கள் முடித்துக்கொண்டபிறகு, நாம் இருவரும் கலந்து பேசினால் போதும் என்றுதான் இருந்துவிட்டேன் என்றான் அரசன்.

தாங்களே ஆலோசனைக் காட்டுக்குள்ளே என்னையும் மறந்து போய்விட்டதுபோலவே எனக்குத் தோன்றியது. இப்போதாவது ஞாபகப்படுத்திக்கொண்டு வந்து சேர்ந்தீர்களே, என்றாள் அரசி.

'ஆம், ஆம். மந்திரியுடனும், தளபதியுடனும், புரோகிதருடனும் நான் நடத்திக்கொண்டிருந்த ஆலோசனைகள் காடாகத்தான் வளர்ந்துகொண்டே போயின. மந்திரி மாறங்காரிதான் அந்த ஆலோசனைக்காட்டில் வழியைச் செப்பனிட்டுக் காட்டினார். அந்த வழி உனக்குச் சரியாகத் தோன்றினால் நாம் இருவரும் கைகோத்துச் செல்லவேண்டியதுதான்' என்றான் அரசன்.

'முடிவாக மந்திரி என்ன சொல்லுகிறார்?'

'ஒரு பெரிய சபை கூட்டவேண்டுமென்கிறார்.'

'ஏன் அப்படி?'

'அப்படியானால்தான் பரமபாகவதரான விஷ்ணுசித்தர் விஜயம் செய்யக்கூடும் என்கிறார் மந்திரி. அப்பெரியாரை ஞானகுருவாகக் கொண்டு ஒழுகுவதுதான் நாம் இம்மையிலேயே மறுமைக்கும் உரிய செல்வத்தைத் தேடிக்கொள்ளும் ராஜமார்க்கம் என்று மந்திரியும் புரோகிதரும் தளபதி வில்லியும் ஒருமுகமாய் அபிப்பிராயப்படுகிறார்கள்.'

'நாம் கூட்டுகிற வித்வத்சபைக்கு எத்தனையோ பண்டிதர்களும் படாடோப மதப்பிரசாரகர்களும் வருவார்கள் என்பது நிச்சயம். பௌத்தபிட்சுவைப் போன்றவர்களும் வருவார்கள். ஆனால் அந்த உண்மை ஞானி, அந்தப் பரம பாகவதர் வரப் போகிறார் என்பது அவ்வளவு நிச்சயமா? அப்பெரியாரின் நண்பரான செல்வநம்பியாவது உறுதி கூறுகிறாரா?'

ராணி இப்படிக் கேட்டதும் மன்னன் சில நிமிஷம் திகைத்திருந்தான். அதுவரை அவனுக்கு எதிரே நின்று பேசிக்கொண்டிருந்த ராணி அரசனுக்கு அருகே ஓர் ஆசனத்தில் அமர்ந்து மேலும் பேசினாள்: 'சமய ஞானிகளைப் பல பிரதேசங்களிலிருந்து வெளிப்படுத்தி வரவழைக்க வேண்டும் என்ற நோக்கமும் ஒரு பெரிய சபை கூட்டுவதால் ஓரளவு நிறைவேறக் கூடியதுதான். ஆனால் முகுந்தாசாரியரின் புத்திர பாக்கியமான விஷ்ணுசித்தர் வந்து சேர வேணுமே, நாம் தேடிப் போவதைக்காட்டிலும், நாம் தகுதியுள்ளவர்களானால் ஞானகுரு சீடர்களாகிய நம்மைத் தேடி வருவது என்று சொன்னது பொருத்தமானதுதான். எதற்கும் ஒரு சபா மண்டபம் அழகாய், சிற்பத் திறனுடன் அமைக்க ஏற்பாடுசெய்வோம்'.

ராணி சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த அரசன், 'சபாமண்டபம் நிர்மாணித்து நாடெங்கும் பறையறைவித்தால் போதுமா? தானுண்டு, தன் கைங்கரியம் உண்டு என்று நந்தவன கைங்கரியத்திலும் பாகவத கைங்கரியங்களிலும் மூழ்கிக் கிடக்கும் அந்தப் பெரியவர் காதில் நமது பறையோசை விழ வேணுமே!' என்று சொல்லிப் பெருமூச்செறிந்தான்.

மன்னன் கவலையில் ராணி தன் கவலையை மறந்தாள். 'தருமிக்குப் பொற்கிழி கிடைத்த கதை தங்கள் ராஜ்யக்கதைதானே' என்றாள்.

அவள் கருத்தை உணர்ந்து கொண்ட அரசன், 'சரி' சபாமண்டபத்தின் தோரணவாசலில் பொன்னும் மணியுமாக வெகு திரவியத்தைக் கிழிச்சீலையில் முடிந்து கட்டி வைப்போம். அந்தப் பொற்கிழியை ஸாரமான சமய உண்மை இன்னதென்று நிரூபிக்கும் நல்லறிஞருக்குக் கொடுப்பதாகப் பறையறைவிப்போம். ஆனால் ஏழைத் தருமி பொற்கிழிக்கு ஆசைப்பட்டு வந்ததுபோல் விஷ்ணுசித்தர் வருவாரா?' என்றான்.

ராணி, 'பணத்தில் ஆசையில்லாதவர்களும் சமயவாதங்களில் கலந்துகொள்ள வருவதில்லையா?' என்று கேட்டாள்.

அதற்கு மன்னன், 'என்னைப்போன்றவர்கள் மகா ராஜ்ய ஆசை இல்லாமலிருந்தும் வீரப் போர்களில் ஆசைகொண்டு படையெடுத்து போகவில்லையா? அதுபோல் பண ஆசை இல்லாத பண்டிதர்களும் வாதப் பிரதிவாதங்களில் ஆசை கொண்டு வருவார்கள். ஆனால் விஷ்ணுசித்தருக்கு வாதப்போர்களிலும் ஆசையில்லையே!' என்று பதில் சொன்னான்.

ராணி சிறிது ஆலோசனை செய்து, 'முக்கியமான பெரியோர்களை நேரில்போய் அழைக்கும்படி தூதர்களையும் அனுப்பிவைப்போம். விஷ்ணுசித்தருக்குத் தூது அனுப்புவதுடன், வருவதற்குப் பல்லக்கையும் அனுப்பி வைப்போம்!' என்று சொன்னாள்.

அரசனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. 'அழகான தந்தப் பல்லக்கையோ தங்கப் பல்லக்கையோ கண்டு ஆசைகொண்டு ஏறிவருவாரா விஷ்ணுசித்தர்?' என்று கேட்டான்.

ராணியும் சிரித்துக்கொண்டே, 'என்னை அவ்வளவு முட்டாளாக நினைத்து விட்டீர்களா?

கேச விருத்திக்கு சிக்கன சுலப சாதனம்
காஷ்மீர்-குஸும்
வேண்டிய எண்ணெயில் கலந்து கொள்க
குடும்ப சரும-சஞ்சீவி
ஸான்டலக்ஸ்
நறுமண சந்தனக்கழிம்பு
மைசூர் M.R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா
உயர்தர ஊதுவத்திகள்
ஸோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன். 54. பந்தர் தெரு, மதறாஸ். 1
டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் ஆசிரியர் ஸ்ரீ ஆர். கே. பார்த்தசாரதியின் சகோதரரும், மகா மகோபாத்தியாய ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியாரின் புதல்வருமான ஸ்ரீ ஆர். கே. ரங்கராஜனுக்கும், சௌ. கமலாவுக்கும் சமீபத்தில் குடந்தையில் விவாஹம் நடைபெற்றது.

ஸ்ரீ சாயிநாதய நம:
அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

ஒருபுறம் விஷ்ணுசித்தரின் தோழர் செல்வநம்பி இருக்கிறார். ஒருபுறம் விஷ்ணுசித்தரின் அருமைத் தந்தையாரின் அருமைச் சீடரான வில்லி இருக்கிறார். மாறங்காரியும் ஒரு நல்ல விஷ்ணு பக்தர். மூன்று ஆழ்வார்கள் கூடிய இடத்தில் முகுந்தனே வந்து சேரவில்லையா? வில்லி, மாறங்காரி, செல்வநம்பி இம்மூன்று ஞானச் செல்வர்களும் இங்கேயிருக்க, உண்மை காண வேணும் என்ற ஆசை நம் நெஞ்சிலே இருக்க, முகுந்தாசாரியரின் புதல்வர் வந்து சேருவார் என்ற என் உள்ளொளி காட்டுகிறது' என்றாள்.

பிறகு ராணி, 'தாங்கள் செல்வநம்பியை மட்டும் மதுரையிலே விட்டுவிட்டு மந்திரியுடனும், தளபதியுடனும் சேதுவுக்குப் போயிருந்தீர்களாமே. அங்கே விசேஷமாக ஒன்றும் இல்லையே. தோழி காத்திருக்கிறாள்; எனக்குக் கொஞ்சம் அவளிடம் வேலை இருக்கிறது' என்றாள்.

அதற்கு அரசன், 'விசேஷம் இருக்கத்தான் செய்கிறது. அங்கே பௌத்த பிட்சுவைச் சந்தித்தோம். நானும், மந்திரியும் அவருடன் பேசிக்கொண்டிருந்ததில், என் உள்ளத்திலும் சில சந்தேகங்கள் தோன்றிவிட்டன. "தளபதி வில்லியும் இப்போது இங்கே வருவார்" என்று மந்திரி என்னிடம் சொன்னதும், பிட்சு ஏதோ அவசர வேலை இருப்பதாகச் சொல்லிப் போய் விட்டார். அவர் வில்லியைச் சந்திக்க விரும்பவில்லை என்று நினைக்கிறேன்' என்றான்.

'அப்படியா செய்தி?' என்று ஒருகணம் பிரமித்து நின்ற ராணி, நீங்கள் நகரசோதனையை ஒருவாறு விரைவில் முடித்துக்கொண்டு வாருங்கள். இது மிகவும் விசேஷமான செய்தி. அது குறித்துச் சாவதானமாய், சாவகாசமாய்ப்பேசிக் கொள்ளவேண்டும். இப்போது நான் தோழியிடம் போகிறேன்' என்று பளிங்கறையை நோக்கிப்போய்விட்டாள்.

(தொடரும்)

கல்யாணத்திற்கு வேண்டிய பட்டு ஜவுளி
தினுசுகள் ஏராளமான டிஸைன்களில்
சரஸமான விலைகளில் கிடைக்குமிடம்

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(போன் : 84188.)

ஸன்னதி தெரு — மயிலாப்பூர் — மதராஸ்.

R. K. ராதாகிருஷ்ண செட்டியார்,
R. K. சாரநாத செட்டியார்,
புரொப்ரைட்டர்ஸ்.

ஜாதகம் ! ஆருடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:-1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt.-Col M. N C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பின்னா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

யாரெல்லாம் ஆங்கிலம் கற்கலாம்

1. ஆங்கில எழுத்துகூடத் தெரியாத பெண்களுக்கும் ஆண்களுக்கும்
2. பாடசாலைகளில் சென்று பயிலமுடியாத குமரிகளுக்கும்
3. சிறிது கற்று நிறுத்தியவர்களுக்கும்
4. ஆங்கில படிப்பு இல்லாத குறையால் பிரமோஷன் கிடையாது வருந்தும் சர்க்கார் சேவகர்களுக்கும்
5. எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தோல்வியுற்று, காலேஜில் பிரவேசமின்றி வருந்துபவர்களுக்கும்
6. பிரமோஷன் வேண்டுமென்று எண்ணுகிற ஆசிரியர்களுக்கும்
7. தவிர, எவர்க்கும் தத்தம் இல்லத்தில் இருந்தே தங்கள் வேலைகளுக்கு யாதொரு இடையூறுமின்றிக் குறைந்த காலத்தில் ஆங்கிலம் கற்கலாம். இன்று ஆங்கில எழுத்துகூடத்தெரியாத ஒருவருக்கு ஓரே வருடத்தில் நானகாவது பாரத்தின் ஆங்கில அறிவு பெறலாம்.

தொடர்ந்து மூன்று வருடங்கள் கற்பதாயின், கேம்பிரட்ஜ் ஸீனியர் என்னும் ஒரு பெரிய பரீட்சையில் தேறலாம். கல்வி பூராவும் தபால் மூலம் நடத்தப்படும். ஆங்கிலம் பயில விரும்புவோர். தான் படித்த வகுப்பையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதவும்.

கேம்பிரட்ஜ் காலேஜ், கைதமுக்கு, திருவனந்தபுரம்

N. B. தங்களது குமாரர்களை விரைவில் கேம்பிரட்ஜ் ஸீனியர் பரீட்சையில் வெற்றியடையச்செய்து, இன்டர்மீடியட்டுக்குப் பிரவேசனம் செய்ய அரிய ஓர் வழியாகும்.

ஸ்ரீமத்பகவத்கீதை

★

சென்னை ஸம்ஸ்கிருத
கலேஜ் உபாத்தியாயராய்
இருந்த கீர்த்தனசார்ய
ஸி. ஆர்.
ஸ்ரீனிவாஸய்யங்கார் பி. ஏ.
எழுதியது.

மூலத்துடனும், அத்வைத வசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப் பட்டது.

★

முழுகாலிகோ பயிண்டு
செய்தது.

விலை ரூ. 3-8-0

(தபால் செலவு 0-8-0)

இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.

★

எமது எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ்செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

★

புத்தக ஜாபிதாவுக்கு
எழுதவும்.

மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ்
மவுண்ட்ரோடு, மதராஸ்.